Registered as a Newspaper



# உதயன்

சுடர் : 41
கதிர் : 115

சனிக்கிழமை
21 மார்ச் 2026

பங்குனி 07 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2057

பக்கங்கள் –12
விலை – ரூபா 50

போர்க்குற்றம் தொடர்பில்

## சர்வதேச விசாரணைக்கு இம்மியும் வாய்ப்பில்லை

நீதியமைச்சர் ஹர்ஷன திட்டவட்டம்

**கொழும்பு, மார்ச் 21**

**இறுதிப்போரின்போது இடம்பெற்ற போர்க்குற்றங்கள் தொடர்பில், சர்வதேச விசாரணைக்கு வாய்ப்பே இல்லை. அத்தகைய முயற்சிகளுக்கு அரசாங்கம் இணங்காது என்று நீதியமைச்சர் ஹர்ஷன நாணயக்கார தெரிவித்துள்ளார்.**

»11

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக

## கலைப்பீட பீடாதிபதியாக பேராசிரியர் பிரதீபராஜா!

யாழ்ப்பாணம், மார்ச் 21
யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப்பீட பீடாதிபதியாக பேராசிரியர் நாகமுத்து பிரதீபராஜா தெரிவு செய்யப்பட்டுள்ளார். யாழ்ப்பாணப் பல்கலைக்கழக

»11



## வடக்கில் இன்று வெப்பம் உச்சம்

எச்சரிக்கை மட்டத்தில் இருக்கும் என்றும் வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 21
வடக்கு மாகாணத்தில் இன்று வெப்பம் உச்சம் பெறும் என்றும், வெப்பநிலை எச்சரிக்கை மட்டத்தைத் தொடும் எனவும் வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரிக்கைவிடுத்துள்ளது. இது தொடர்பில் அந்தத்

»11

## வட்டுக்கோட்டை மருத்துவமனையின் நெருக்கடிகளை உடன் நிவர்த்திக்குக

இன்று போராட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 21
வட்டுக்கோட்டை பிரதேச மருத்துவமனையில் நீண்டகாலமாக நிலவும் மருத்துவ நெருக்கடிகளை நிவர்த்தி செய்யுமாறு வலியுறுத்தி, மருத்துவமனைக்கு

»11



## வடமராட்சி கிழக்கில் யானைகள் ஊடுருவல்

பயன்தரு மரங்கள் அழிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 21
யாழ்ப்பாணம் வடமராட்சி கிழக்கு கட்டைக்காடு, சுண்டிக்குளம் பகுதியில் நேற்று இரவு 5 யானைகள் வீடுகள் மற்றும் கரைவலைவாடிகளுக்குள் நுழைந்து பெருமளவு சொத்திழப்புகளை

»11

## வேதாரணியேஸ்வர வித்திக்கு அதிபரை உடன் நியமிக்குக!

பெற்றோர் போராட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 21
யாழ்ப்பாணம் கரணவாய் வேதாரணியேஸ்வர வித்தியாலயத்தில் நீண்டநாள்களாக அதிபர் நியமனம் வழங்கப்படாமைக்கு, அங்கு கல்விகற்கும் மாணவர்

»11



## நயினாதீவில் நேற்று மினி சூறாவளி

யாழ்ப்பாணம், மார்ச் 21
யாழ்ப்பாணம் நயினாதீவில் நேற்று வெள்ளிக்கிழமை காலை திடீர் மினிசூறாவளி வீசியுள்ளதால், சிறிதளவு சேதங்கள் ஏற்பட்

»11

## எரிபொருள் நிலையங்களுக்கு இன்று விநியோகம் தொடரும்



யாழ்ப்பாணம், மார்ச் 21
எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு இன்று வழமையான முறையில் எரிபொருள் விநியோகம் இடம்பெறும் என்று பெற்றோலியக் கூட்டுத்தாபன வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.
விசேட நடவடிக்

»11

## களப் பணியாளர்களுக்கு எரிபொருள் பற்றாக்குறை

ஆளுநரிடம் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், மார்ச் 21
வடக்கு மாகாணத்தில், பின்தங்கிய பகுதிகளில் அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் துறைசார் செயற்பாடுகளை மேற்கொள்ளும் களப் பணியாளர்கள் கடும் எரிபொருள் பற்றாக் குறையை எதிர்கொள்ள

»11

முச்சந்தி முரளி

"சக்கடத்தார் எத்தனை பேர் ஏறி விழுந்த குதிரையில திசைகாட்டிக்காரரும் ஏறுகினம் கண்டியளோ"

மானிப்பாய்

## மருதடி விநாயகருக்கு நாளை கொடியேற்றம்

யாழ்ப்பாணம், மார்ச் 21
வரலாற்றுப் பிரசித்திபெற்ற மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய மஹோற்சவப் பெருந்திருவிழா நாளை ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

»11

## அமெரிக்கப் போர் விமானங்களை அனுமதிக்க மறுத்தது இலங்கை!

ஈரானியக் கப்பல்களுக்கும் கதவடைப்பு
ஜனாதிபதி அநுர நாடாளுமன்றில் தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 21
அமெரிக்கப் போர் விமானங்களை இலங்கையில் தரையிறக்குவதற்கு அனுமதி கோரப்பட்ட நிலையில், அதற்கு அனுமதி மறுக்கப்பட்டது என்று ஜனாதிபதி அநுர தெரிவித்தார்.
மத்திய கிழக்குப் போரால் இலங்கைக்கு ஏற்படும் நெருக்

»11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| கொவிசெத | |
|---|---|
| திகதி | 20.03.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 4381 |
| ஆங்கில எழுத்து | M |
| வெற்றி இலக்கங்கள் | 14 30 38 47 |
| விரோ எழுத்து | M |

| ஹந்தஹண ராசி சுப பலன் | |
|---|---|
| திகதி | 20.03.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1448 |
| வெற்றி இலக்கினம் | மிதுனம் |
| வெற்றி இலக்கங்கள் | 29 49 53 58 |

| NLB ஜய | |
|---|---|
| திகதி | 20.03.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0407 |
| ஆங்கில எழுத்து | M |
| வெற்றி இலக்கங்கள் | 6 9 3 7 |

| மெகா பவர் | |
|---|---|
| திகதி | 20.03.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2487 |
| ஆங்கில எழுத்து | V |
| சுப்பர் இலக்கம் | 03 |
| வெற்றி இலக்கங்கள் | 15 30 49 73 |

| மஹஜன சம்பத | |
|---|---|
| திகதி | 20.03.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 6139 |
| ஆங்கில எழுத்து | G |
| வெற்றி இலக்கங்கள் | 9 5 1 7 9 8 |

| தன நிதானய | |
|---|---|
| திகதி | 20.03.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2169 |
| ஆங்கில எழுத்து | P |
| வெற்றி இலக்கங்கள் | 02 18 32 58 |
| விசேட எழுத்து | P |

| சுப தவசக் | |
|---|---|
| திகதி | 20.03.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0255 |
| வெற்றி இலக்கினம் | மிதுனம் |
| வெற்றி இலக்கங்கள் | 01 10 54 |

# ஈரானுக்கு எதிரான தீர்மானம்; இலங்கை ஆதரவு அளிக்காது!

## இரு தரப்பும் பொறுப்புக்கூறவேண்டும் அமைச்சர் விஜித தெரிவிப்பு

**கொழும்பு, மார்ச் 21**

**அரபு வளைகுடா நாடுகள் மீது ஈரான் நடத்திய தாக்குதல்களைக் கண்டித்து ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச்சபையில் கொண்டுவரப்பட்ட தீர்மானத்தை இலங்கை ஆதரிக்கவில்லை என வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.**

இந்தத் தீர்மானம் சமநிலையற்றது என்பதே இதற்கான காரணம் எனவும் அவர் சுட்டிக்காட்டினார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

குறித்த தீர்மானத்தில் அமெரிக்கா மற்றும் இஸ்ரேலின் நடவடிக்கைகள் குறித்த குறிப்புகள் இடம்பெறவில்லை. இலங்கை ஒரு சிறிய நாடாக இருந்தாலும், உலக அமைதிக்கான முயற்சிகளில் தெளிவான மற்றும் உறுதியான நிலைப்பாட்டைக் கொண்டுள்ளது. ஒருதலைப்பட்சமான முன்மொழிவுகளை நாங்கள் ஆதரிக்கப் போவதில்லை, யுத்தச் சூழலில் ஒரு தரப்பை மட்டும் குற்றஞ்சாட்டமுடியாது. மோதலில் ஈடுபட்டுள்ள இரு தரப்பினருமே தவறுகளை இழைத்துள்ளனர். போர் நிறுத்தப்படவேண்டுமாயின், இரு தரப்பினரும் பொறுப்புக்கூறவேண்டியது அவசியம். சர்வதேசச் சட்டங்களுக்கு உட்பட்டே இலங்கை தனது நடுநிலைமையைச் சர்வதேச சமூகத்தில் வெளிப்படுத்தி வருகிறது. இலங்கையில் தடுத்துவைக்கப்பட்டுள்ள 208 ஈரான் கடற்படையினர் தற்போது வெலிசர கடற்படைத் தளத்தில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கான உணவு, தங்குமிடம் மற்றும் மருத்துவத் தேவைகள் அரசாங்கத்தின் செலவில் வழங்கப்படுகின்றன. போர்ச் சூழலில் ஒரு தரப்பிற்குச் சொந்தமான கப்பல் மற்றும் அதன் சிப்பாய்கள் இலங்கையின் பாதுகாப்பில் இருப்பது குறித்து தீவிரமாக ஆராயப்பட்டு வருகின்றது- என்றார். (ச-இ)

| சுபிரி தன சம்பத | | |
|---|---|---|
| திகதி | தினம் | வெற்றி வாரம் |
| 20.03.2026 | வெள்ளிக்கிழமை | 0847 |
| DLB | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் |
| | V | 8 1 1 6 2 3 |

| Super Ball DLB | | |
|---|---|---|
| | திகதி | தினம் |
| | 20.03.2026 | வெள்ளிக்கிழமை |
| சீட்டிழுப்பு வாரம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் |
| 3113 | D | 01 50 66 73 |

| சனிதா DLB | | |
|---|---|---|
| | திகதி | தினம் |
| | 20.03.2026 | வெள்ளிக்கிழமை |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| O | 06 18 21 37 | 5274 |

| SASIRI DLB | |
|---|---|
| திகதி | தினம் |
| 20.03.2026 | வெள்ளிக்கிழமை |
| வெற்றி வாரம் | வெற்றி இலக்கம் |
| 0943 | 06 15 18 |

| லக்ன ராசி | | |
|---|---|---|
| | திகதி | தினம் |
| | 20.03.2026 | வெள்ளிக்கிழமை |
| ரிஷபம் | வெற்றி இலக்கம் | சீட்டிழுப்பு வாரம் |
| DLB | 39 47 54 56 | 4825 |

| KAPRUKA DLB | | | |
|---|---|---|---|
| | திகதி | | தினம் |
| | 20.03.2026 | | வெள்ளிக்கிழமை |
| ஆங்கில எழுத்து | சுப்பர் இலக்கம் | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| P | 20 | 12 24 30 60 | 2289 |

| அத கோடிபதி DLB | | |
|---|---|---|
| | திகதி | தினம் |
| | 20.03.2026 | வெள்ளிக்கிழமை |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| Q | 20 38 49 70 | 2939 |

# QR சிக்கலுக்கு உதவிச்சேவை

கொழும்பு, மார்ச் 21

தேசிய எரிபொருள் அனுமதிக் கட்டமைப்பான கியூ.ஆர். முறைமையில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக உடனடி உதவிச் சேவை ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக டிஜிற்றல் பொருளாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்தக் கட்டமைப்பில் பதிவு செய்யும்போது அல்லது அதைப் பயன்படுத்தும்போது வாடிக்கையாளர்கள் எதிர்கொள்ளும் தொழில்நுட்பச் சிக்கல்களையும் தடைகளையும் விரைவாகத் தீர்ப்பதே இதன் நோக்கமாகும்.

இதன்படி, வாகனப் பதிவின்போது ஏற்படும் எந்தவொரு சிக்கல்களுக்கும் உதவி பெற, 0760191919 என்ற எண்ணுக்கு வட்ஸ்அப் மூலம் தகவல் வழங்கமுடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சேவை ஊடாக தேசிய எரிபொருள் அனுமதிக் கட்டமைப்பை பயன்படுத்துவது குறித்த வழிகாட்டுதலையும் தொழில்நுட்ப ஆதரவையும் வழங்குவது மாத்திரமின்றி மோசடி நடவடிக்கைகள் அல்லது கட்டமைப்பைத் தவறாகப் பயன்படுத்துபவர்கள் தொடர்பில் முறைப்பாடும் செய்யலாம் என டிஜிற்றல் பொருளாதார அமைச்சு தெரிவித்துள்ளது. (ச-இ)

# 55 இலட்சம் வாகனங்கள் QR முறைமையில் பதிவு!

கொழும்பு, மார்ச் 21

இலங்கையில் எரிபொருள் விநியோகத்தை சீராக முன்னெடுப்பதற்காக அமுல்படுத்தப்பட்டுள்ள கியூ.ஆர். முறைமையில் இதுவரை 55 இலட்சத்துக்கும் அதிகமான வாகனங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளதாகச் சபை முதல்வரும் அமைச்சருமான பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் வாய்மூல விடைக்கான வினா நேரத்தின் போது, அவர் இதனைத் தெரிவித்தார்.

நாட்டில் பதிவு செய்யப்பட்டுள்ள 88 இலட்சம் வாகனங்களில், இதுவரை 55 இலட்சம் பேர் கியூ.ஆர். முறைமையில் இணைந்துள்ளனர். இந்தப் பதிவு எண்ணிக்கை வரும் நாள்களில் 72 இலட்சம் வரை அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. பழைய வாகனம் ஆனால் புதிய தொலைபேசி இலக்கம் வைத்திருப்பவர்கள் அல்லது பழைய தொலைபேசி இலக்கத்தை வைத்துக்கொண்டு புதிய வாகனத்தை வாங்கியவர்களுக்குப் பதிவுகளைச் செய்வதில் சிக்கல்கள் ஏற்பட்டுள்ளன. இவ்வாறான சிக்கல்களைத் தீர்ப்பதற்கெனத் தற்போது இணையத்தளம் ஊடாகவே புதிய விபரங்களைப் பதிவு செய்வதற்கு வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. கியூ.ஆர். பதிவின் போது தவறான தகவல்களை வழங்கி மோசடியில் ஈடுபட்டால், அது இணைய மோசடியாகக் கருதப்பட்டுச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ச-இ)

# குஷ் போதையுடன் தொழிலதிபர் கைது

கொழும்பு,மார்ச் 21

கட்டுநாயக்க சர்வதேச விமானநிலையத்தில் மேற்கொள்ளப்பட்ட விசேட சோதனையின்போது, சுமார் 51.4 மில்லியன் ரூபா பெறுமதியான 'குஷ்' ரக போதைப்பொருள்களுடன் 32 வயதுடைய தொழிலதிபர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

குறித்த நபர் தாய்லாந்தின் பெங்கொக் நகரில் இந்தப் போதைப்பொருள்களைக் கொள்வனவு செய்து, அங்கிருந்து இந்தியாவின் பெங்களூர் நகருக்குச் சென்று பின்னர் நேற்று இலங்கை வந்தடைந்துள்ளார். (ச-இ)

# பன்றி வளர்ப்புக்கு காப்புறுதித் திட்டம்



கொழும்பு, மார்ச் 21

இலங்கையில் வணிக ரீதியாகப் பன்றி வளர்ப்பில் ஈடுபட்டுள்ள விவசாயிகளைப் பாதுகாக்கும் நோக்கில், விவசாய, கால்நடை, காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சால் புதிய 'பன்றி வளர்ப்பு காப்புறுதித் திட்டம்' அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. வணிக ரீதியாகப் பன்றி வளர்ப்புப் பண்ணைகளை நடத்துவோர், தமது இனப்பெருக்க விலங்குகளுக்காக இந்தக் காப்புறுதியைப் பெற்றுக்கொள்ளலாம்.

6 மாதங்கள் முதல் 4 வருடங்கள் மற்றும் 6 மாதங்கள் வரையான வயதுடைய இனப்பெருக்கப் பன்றிகளுக்கு இந்தக் காப்புறுதி வழங்கப்படவுள்ளது. ஒரு இனப்பெருக்க விலங்கின் அதிகபட்ச பெறுமதியான 200,000 ரூபா வரை அல்லது உற்பத்திச் செலவின் அடிப்படையில் இழப்பீடு பெற்றுக்கொள்ளமுடியும் என்றும் அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது. (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போர்ச்சூழலைச் சமாளிப்பதற்கு ஏற்றுமதித்துறைக்கு முதலிடம்!

## ஜனாதிபதி தெரிவிப்பு



கொழும்பு, மார்ச் 21

**தேசியப் பொருளாதாரத்தைப் பாதிப்பிலிருந்து பாதுகாக்க, ஏற்றுமதித் துறைக்கு அரசாங்கம் அதிகபட்ச ஆதரவை வழங்கும் என ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.**

மத்திய கிழக்கின் போர்ப் பதற்றம் இலங்கையின் ஏற்றுமதித் துறையில் ஏற்படுத்தியுள்ள தாக்கங்கள் குறித்து ஆராயும் விசேட கலந்துரையாடல் நேற்று முன்தினம் ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றது.

இதில் ஏற்றுமதித் துறையில் ஈடுபட்டுள்ள உற்பத்தியாளர்கள் மற்றும் சேவை வழங்குநர்கள் எதிர்கொள்ளும் பிரதான பிரச்சினையான எரிபொருள் தட்டுப்பாடு குறித்து ஜனாதிபதி இதன்போது விசேட கவனம் செலுத்தினார். இத்துறை தடையின்றி இயங்குவதற்குத் தேவையான எரிபொருளைப் பெற்றுக்கொடுக்க முன்னுரிமை அளிக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

வர்த்தக சபை பிரதிநிதிகள் மற்றும் ஏற்றுமதியாளர்களால் முன்வைக்கப்பட்ட ஆலோசனைகள் மற்றும் முறைப்பாடுகளை விரிவாகக் கேட்டறிந்த ஜனாதிபதி, அவற்றை நிவர்த்தி செய்ய அமைச்சு மட்டத்திலான ஒத்துழைப்புகள் வழங்கப்படும் என்றும் உறுதியளித்தார். (ச-இ)

## பெற்றோல் பதுக்கியவருக்கு அபராதமும் சிறையும்

கொழும்பு, மார்ச் 21

அனுமதிப்பத்திரம் இன்றி, லொறி ஒன்றில் 65 லீற்றர் பெற்றோலை வைத்திருந்த குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட நபருக்கு 2,500 ரூபா அபராதமும் 2 மாத கால கட்டாயச் சிறைத்தண்டனையும் விதித்து கல்கிசை நீதவான் பசான் அமரசேன நேற்றுமுன்தினம் உத்தரவிட்டுள்ளார்.

கல்கிசையைச் சேர்ந்த ஒருவருக்கே இவ்வாறு சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## விவசாய நடவடிக்கைகளுக்கு தட்டுப்பாடின்றி எரிபொருள்!

கொழும்பு, மார்ச் 21

விவசாயிகளுக்கு எரிபொருள் வழங்கும் சட்டம் தளர்த்தப்பட்டுள்ள நிலையில் நாட்டின் அனைத்து விவசாயிகளுக்கும் தேவையான எரிபொருளைத் தட்டுப்பாடின்றி பெற்றுக்கொடுப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது என்று விவசாயத் துறை பிரதியமைச்சர் நாமல் கருணாரத்ன தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் வாய்மூல விடைக்கான வினாக்கள் வேளையில் பதிலளிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

விவசாய அமைப்புகள் மூலமாக விவசாயிகளுக்குத் தேவையான எரிபொருளை வழங்குவதற்கு விசேட திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன.

விவசாயிகளுக்குத் தேவையான போதுமானளவு எரிபொருளை எரிபொருள் நிலையங்கள் மூலம் பெற்றுக்கொள்ளமுடியும் பரல்களிலோ அல்லது கலன்களிலோ எவ்வாறாயினும் விவசாயச் சங்கங்கள் எரிபொருளைப் பெற்றுச் சென்று விவசாயிகளுக்கு வழங்க முடியும் .

அதற்கான வாய்ப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன- என்றார். (ச-இ)



## ரணிலுக்கு சத்திரசிகிச்சை

கொழும்பு,மார்ச் 21

சிங்கப்பூர் மருத்துவமனையில் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு மேற்கொள்ளப்பட்ட சத்திர சிகிச்சை வெற்றிகரமாக நிறைவடைந்துள்ளது என்று ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

அறுவைச் சிகிச்சையின் பின்னர் முன்னாள் ஜனாதிபதி தற்போது குணமடைந்து வருகின்றார். மேலதிக ஓய்வு தேவைப்படுவதால், அவர் மேலும் சில நாள்களுக்கு மருத்துவமனையிலேயே தங்கியிருப்பார் என்றும் ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்த்தன தெரிவித்துள்ளார். (ச-இ)

## உலகில் மகிழ்ச்சியான நாடுகளில் 134 ஆவது இடத்தில் இலங்கை

கொழும்பு,மார்ச் 21

2026ஆம் ஆண்டுக்கான உலக மகிழ்ச்சி அறிக்கை நேற்று முன்தினம் வெளியிடப்பட்டுள்ள நிலையில் மொத்தம் 147 நாடுகளை உள்ளடக்கிய இந்த ஆய்வில், இலங்கை 4.0 புள்ளிகளைப் பெற்று 134 ஆவது இடத்தைப் பிடித்துள்ளது. கடந்த 2025ஆம் ஆண்டு 133ஆவது இடத்தில் இருந்த இலங்கை, தற்போது ஒரு இடம் பின்வாங்கியுள்ளது. பொருளாதார நெருக்கடி, வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு மற்றும் சமூக அமைதியின்மை போன்ற காரணிகளால் இலங்கையர்களின் வாழ்க்கை திருப்தி குறைந்துள்ளதாக ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இலங்கையை விட அண்டை நாடுகள் அதிக மகிழ்ச்சியான நாடுகளாகத் தரப்படுத்தப்பட்டுள்ளன.

இந்தியா 116ஆவது இடத்திலும் பாகிஸ்தான், பங்களாதேஷ் என்பன இலங்கையை விட முன்னணியில் உள்ளன. பின்லாந்து தொடர்ந்து 9ஆவது ஆண்டாக உலகின் மகிழ்ச்சியான நாடாக முதலிடத்திலுள்ளது. (ச-இ)




## கியூ.ஆர். கில்லாடிகள்..!

"சட்டம் போட்டுத் தடுக்கிற கூட்டம் தடுத்துக் கொண்டேயிருக்குது. அதைத் திட்டம் போட்டுத் திருடுற கூட்டம் திருடிக்கொண்டேயிருக்குது எண்டு எம்.ஜி.ஆர் சும்மாவோ பாடினவர்? இண்டைக்கும் அவர் படிச்சமாதிரித் தானே நடந்து கொண்டிருக்குது. பெற்றோல், டீசலை பதுக்கக்கூடாது, அளவுக்கு மிஞ்சி வாங்கி வரிசையுகத்தை கொண்டுவரக்கூடாது எண்டதுக்காக அரசாங்கம் திரும்பவும் கியூ.ஆர்.சிஸ்டத்தைக் கொண்டந்தால், அதிலையும் ஆட்டையைப் போடுறவை இருக்கத்தான் செய்யினம். ஆனால் இவையள் பட்டப்பகலில, எல்லாற்ற கண்ணுக்கு முன்னாலையும் ஆட்டையைப் போடுகினம் எண்டதுதான் அவையின்ர கெட்டித்தனம்.

பெற்றோல் செற்றுக்கு மோட்டர்சைக்கிளோட கியூ. ஆரையும் கொண்டுபோய்க் குடுத்தால், முதல் வேலையா உங்கட ஒருகிழமைக்கான பெற்றோல் அஞ்சு லீற்றரையும் கியூ.ஆரில இருந்து வெட்டுவினம். ஒரு லீற்றர் பெற்றோல் இப்ப 317 ரூபா. அப்ப அஞ்சு லீற்றர் பெற்றோலுக்கு நீங்கள் ஆயிரத்து ஐநூற்றி எண்பத்தைஞ்சு ரூபா (1585/=) குடுக்கோணும். ஆனால் இப்ப அநேகமா எல்லாரிட்டையும் சில்லறைக்காசு இருக்கிறேலை. ஆயிரம்,ஐநூறு, நூறு எண்டு தாள்காசைத்தான் கொண்டுபோய் நீட்டுவம். இதை வடிவாப் பாவிக்கிற பெற்றோல் செற்காரர் உங்களில ஏதோ கருணை காட்டுற மாதிரி, "அண்ணை ஆயிரத்து ஐநூற்றி எண்பத்தைஞ்சு ரூபா சில்லறையாத் தாங்கோ. இல்லாட்டி ஆயிரத்து ஐநூறுக்கு மட்டமா அடிச்சால் சோலி இல்லையெல்லோ உங்களுக்கு தூண்டில் போடுவார். நீங்களும் கனக்க யோசிக்க மாட்டிங்கள். எங்களுக்காகத்தானே அவர் அப்பிடியொரு வழியைச் சொல்லுறார் எண்டு நினைச்சு சரியண்ணை, ஆயிரத்து ஐநூறுக்கே அடியுங்கோ" எண்டு காசை நீட்ட, அவையும் ஏதோ வள்ளல் மாதிரி பெருமையோட உங்களுக்கு பெற்றோலை அடிச்சு விடுவினம்.

உங்கட கியூ. ஆரில வெட்டின அஞ்சு லீற்றர் பெற்றோலும் உங்களுக்கு அடிபட்டிருக்காது. எப்பிடி நீங்கள் அவைக்கு 85 ரூபாவைக் குடுக்காமல், மட்டமா ஆயிரத்து ஐநூறு ரூபாவுக்கு அடிச்சீங்களோ அந்தத் தொகைக்கு ஏத்த அளவிலதான் பெற்றோலும் அடிபட்டிருக்கும். இன்னும் கிளியரா சொல்லோணும் எண்டால், பெற்றோல் செற்காரர் உங்களுக்கு 4.73 லீற்றர் பெற்றோலைத்தான் அடிச்சிருப்பினம். அதுக்கான காசைத்தான் நீங்களும் குடுத்திருப்பியள். இதில என்ன பகல்கொள்ளை? அதைத்தான் பட்சி இப்ப சொல்லப்போகுது. உங்கட கியூ. ஆரில வெட்டுப்பட்ட மிச்ச 270 மில்லி லீற்றர் பெற்றோல் கோயில் கணக்கில பெற்றோல் செற்றுக்கே போடும். இப்பிடி ஒவ்வொருத்தரிட்டையும் வெட்டினால் அவைக்கு எவ்வளவு பெற்றோல் சேரும்? "அஞ்சு லட்சம் பேரிட்ட அஞ்சு பைசாவை அஞ்சு லட்சம் தரம் திருடினால் அது எவ்வளவு பெரியதப்பு?" எண்டு அந்நியன் படத்தில சொல்லுறமாதிரித்தான் இந்த விளையாட்டும். செற்காரர் இப்பிடி ஒவ்வொருத்தரிட்டையும் 270 மில்லி லீற்றரா வெட்டி வெட்டி அதைச் சேர்த்து பிறகு, அதை கறுப்புச் சந்தையில கூடின விலைக்கு குடுப்பினம்.

இனியாவது கொஞ்சம் விழிப்போட இருங்கோ! செற்காரர் ஆயிரத்து ஐநூறுக்கு மட்டமா அடிக்கட்டோ? எண்டு கேட்டால், நீங்கள் "அஞ்சு லீற்றரையும் அடியுங்கோ" எண்டு சொல்லுங்கோ.அதைவிட அடிக்க வேண்டிய பெற்றோல் காசை கணக்குப் பாத்து, அந்தளவு தொகையை சில்லறையாக் கொண்டு போங்கோ. அதுக்குப் பிறகு ஒருத்தரும் உங்களிட்ட இப்பிடி கண்ணுக்கு முன்னாலையே களவெடுக்கேலாது கண்டியளோ.

padsi@uthayan.com -பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இடமாறும் மருத்துவ அதிகாரிக்கு யாழ்.போதனாவில் பிரிவுபசாரம்

யாழ்ப்பாணம், மார்ச் 21

யாழ்ப்பாணம்போதனா மருத்துவமனை வெளிநோயாளர் பிரிவின் பொறுப்பு மருத்துவ அதிகாரியாகக் கடமையாற்றிய மருத்துவர் குமாரசாமி மகேந்திரன் நல்லூர்ப் பிரிவுச் சுகாதார மருத்துவ அதிகாரியாக இடமாற்றம் பெற்றுள்ளார்.

இடமாற்றம் பெற்றுச் செல்லும் மருத்துவர் மகேந்திரனுக்கு யாழ். போதனா மருத்துவமனையில் மருத்துவமனையின் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி தலைமையில் பிரிவுபசார நிகழ்வு நேற்று இடம்பெற்றது. மருத்துவமனை நிர்வாகம் சார்பில் அவர் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். இவர் 2022ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 14ஆம் திகதி முதல் யாழ்.போதனா மருத்துவமனையில் சேவையாற்றியுள்ளார். (க-66)

## வேலையாள் தேவை

சட்டநாதர் சிவன் தேவஸ்தானத்திற்கு பல் வேலையாள் தேவை. சைவ ஆசாரமுடையவராகவும் 65 வயதிற்கு மேற்படாதவரும் ஆலயத்திற்கு கிட்டிய தூரத்தில் வதிபவராகவும் தொண்டு அடிப்படையில் கடமை புரியக்கூடியவராகவும் இருத்தல் வேண்டும்.

சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கலாம்.

கீழ்காணும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்

**077 5989 210**

**பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.**

(CS 61033)A

## வேலைவாய்ப்பு

**யாழில் இயங்கும் சுப்பர் மார்க்கட் மற்றும் பலசரக்கு கடைக்கு கீழ் காணும் ஆட்கள் தேவை**

1. Sales Assistants (Boy & Girl)
2. Computer Billing & Cashier
3. Packing
4. Driver
5. Accountant
6. Delivery Boy
7. Part Time (5.00 pm to 10.00)

யாழ் மாநகர சபைக்கு உட்பட்டவர்கள் விரும்பத்தக்கது.

**தொடர்புக்கு:077 4195 209**
**077 4195 218**

(CS 31480) A

## ஒன்றுகூடல்பிற்போடல்

காரைநகர் பிரதேச செயலகத்தில் நாளைஞாயிற்றுக்கிழமை நடைபெறவிருந்த கலைஞர்ஒன்றுகூடல் நிகழ்வு பிற்போடப்பட் டுள்ளது என பிரதேசசெயலகத்தின் அறிவித்துள்ளனர். (ச-9)

## மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள BJE XXXX தொடரிலக்கம் உடைய HONDA BENLY 125 மோட்டார் சைக்கிள் உடன் விற்பனைக்கு உண்டு.

தரகர் தேவையில்லை.

தொடர்பு: **0777 11 55 96**

## மரண அறிவித்தல்



தோற்றம் 10 . 02 . 1972

மறைவு 18 . 03 . 2026

**யோகலா முகுந்தன்**

யாழ் கொக்குவில் நந்தாவிலை பிறப்பிடமாகவும் பிரித்தானியா லண்டனை வதிவிடமாகவும் கொண்ட யோகலா முகுந்தன் அவர்கள் கடந்த 18.03.2026 புதன்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.


அன்னார் காலஞ்சென்ற தம்பிநாதன் மற்றும் புஸ்பதேவி (கனடா) தம்பதியரின் பாசமிகு மூத்த புதல்வியும், நடராசா மகாலக்சுமி (தாவடிச்சந்தி) தம்பதியரின் அன்பு மருமகளும், முகுந்தன் அவர்களின் ஆருயிர் மனைவியும், தரங்கினி, கனிஷன் ஆகியோரின் பாசமிகு தாயாரும், யோகுணன் (கனடா), யோகரன் (கனடா), யோதினி (லண்டன்) ஆகியோரின் சகோதரியும், சதிஸ்குமார், விஜயபாலினி (ஜெனனி), கிருசாந்தி (வேணி), Dr.சுகுந்தன், Dr.துஜித்தா காலஞ்சென்ற முகுந்தினி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (22.03.2026) ஞாயிற்றுக்கிழமை லண்டனில் நடைபெறும், இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 31479) A

## மரண அறிவித்தல்



தோற்றம் 08 . 04 . 1942

மறைவு 19 . 03 . 2026

**சின்னையா சின்னராசா**

வேலணை கிழக்கு 1ம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும், புளியங்கூடல் தெற்கை வதிவிடமாகவும் கொண்ட சின்னையா சின்னராசா அவர்கள் கடந்த 19.03.2026 அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் அமரர்கள் சின்னையா - நாகபூசணி தம்பதியினரின் அன்பு மகனும், அமரர் சதயலட்சுமி அவர்களின் அன்புக் கணவரும், அமரர்கள் சுந்தரம் - சின்னம்மா தம்பதியினரின் மருமகனும், அமரர்கள் குணலெட்சுமி, குணபூசணி, விநாயகமூர்த்தி செல்வநாயகி, உலகநாதன் மற்றும் விசாகலெட்சுமி ஆகியோரின் மைத்துனரும், அமரர்கள் கந்தையா, சோமசுந்தரம், சௌந்தரம், சுப்ரமணியம், மற்றும் சரோஜினிதேவி மனோகரன் ஆகியோரின் சகலனும் ஆவார். சசீலன் (யாழ்ப்பாணம்), சசிகரன் (ஆசிரியர், யா/புங்குடுதீவு மத்திய கல்லூரி), சசிகா (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், பதிமலர், நிறைஞ்சனி (ஆசிரியர், யா/புங்குடுதீவு ஸ்ரீசுப்பிரமணியம் மகளிர் வித்தியாலயம்), விஜயதர்சன் (கனடா) ஆகியோரின் பாசமிக்க மாமனாரும், சாதனா, அஸ்விகா, அகநிலா, அக்ஷஜன், அக்ஷரன், அக்ஷரா, கவிநயா, கவின், காவியன், கவிதன், கவிநிலா ஆகியோரின் அன்புமிக்க பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (22.03.2026) ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் இல்லத்தில் (புளியங்கூடல்) நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக மதியம் 1.00 மணியளவில் சாட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டிக் கொள்கிறோம்.

(CS 314841)A

தகவல்:
குடும்பத்தினர்
077 6142 645
077 2365 642

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

## மரண அறிவித்தல்



தோற்றம் 15 . 05 . 1946

மறைவு 19 . 03 . 2026

**சுந்தரம்பிள்ளை தனலெட்சுமி (பவளம்)**

யாழ்ப்பாணம் வேலணையைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம், கொழும்பு , வவுனியா கோவில் புதுக்குளத்தை வதிவிடமாகவும் கொண்ட சுந்தரம்பிள்ளை தனலெட்சுமி அவர்கள் 19.03.2026 வியாழக்கிழமை இறைவன் திருப்பாதம் சென்றுள்ளார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சரவணமுத்து இராசம்மா தம்பதிகளின் அன்பு மகளும், சங்கரப்பிள்ளை பாக்கியம் தம்பதிகளின் அருமை மருமகளும், சங்கரப்பிள்ளை சுந்தரம்பிள்ளை அவர்களின் ஆசை மனைவியும், மற்றும் இராசலிங்கம் (Rasam Bodywork Jaffna), புஸ்பராணி, ஜெயகேந்திரவதி, நேசமலர் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான கைலாசபிள்ளை, பரமேஸ்வரி மற்றும் சபாரத்தினம், காலஞ்சென்ற கனகலெட்சுமி, கணேசலிங்கம் மற்றும் பரராஜசிங்கம், பரமேஸ்வரன் ஆகியோரின் அன்பு மைத்துணியும், மற்றும் தில்லைநாயகி (திருமகள், ஓய்வு நிலை ஆசிரியர் ) லோகேஸ்வரன் ( லோகர் ) ஜெயதீஸ்வரன் ( ஜெயம் ) சிவநாயகி ( ஜீவா) ஜெயகரன் ( கரன்) சுதாநாயகி (சுதா) ஆகியோரின் பாசமிகு தாயாரும் தேவகுமார், கவிதா, சுரேகா,சுகந்தன், தேவசேனா, சுதாகரதாஸ் ஆகியோரின் அருமை மாமியாரும் .மாதுரி டினேஸ், கனிரதன், காலஞ்சென்ற தனுரதன், மற்றும் அட்ஷலா, அவேதனா, அனுஷி, சாரா, நிஜன், நிஜனீ, சுகனி, சுஜீவ், சுருதி, சிவானி, சேயோன், ஹரிணி, ஜனனி, மெலானி ஆகியோரின் ஆருயிர் பேத்தியும், சாய்ஷ், சாய்டிஜா வின் அன்புப் பூட்டியும் ஆவார் .

அன்னாரின் ஈமக்கிரியைகள் எதிர்வரும் 22.03.2026 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல், தகனக் கிரியைகளுக்காக கோவில் புதுக்குளம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டிக் கொள்கிறோம்.

(CS 314821)A

லோகர் (மகன்) இலங்கை 00 94 (76) 009 3571
ஜெயம் ( மகன் ) சுவிஸ் 00 41 76 310 26 43
கரன் ( மகன் ) லண்டன் 00 44 7711 596389

தகவல்:
குடும்பத்தினர்

இல: 4, முதலாம் ஒழுங்கை
கோவில் புதுக்குளம், வவுனியா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

உண்மை - நேர்மை - அஞ்சாமை






## பொய்யாமொழி

**அன்பகத் தில்லா உயிர்வாழ்க்கை வன்பாற்கண்
வற்றல் மரந்தளிர்த் தற்று**

**பொருள்:** அகத்தில் அன்பு இல்லாமல் வாழும் உயிர்வாழ்க்கை வளமற்ற பாலைநிலத்தில் பட்டமரம் தளிர்த்தாற் போன்றது.

## தற்சார்பு எனும் தன்மானம்..!

மத்திய கிழக்கில் நிலவும் போர்ப்பதற்றம் காரணமாக, இலங்கையில் உணவுப் பொருள்களின் விலைகள் கணிசமாக அதிகரிக்கும் அபாயம் காணப்படுகின்றது எனக் கூறியிருக்கின்றார் வர்த்தகம் மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சர் வசந்த சமரசிங்க. நாட்டுக்குள் இறக்குமதி செய்யப்படும் பருப்பு வகைகள் நூறுவீதம் வெளிநாடுகளில் இருந்தே இறக்குமதி செய்யப்படுகின்றன. அத்துடன், உருளைக் கிழங்கு, வெங்காயம் உள்ளிட்ட உணவுப் பொருள்களின் கேள்வியிலும் 80 வீதமானவை வெளிநாட்டு இறக்குமதியையே நம்பியுள்ளதால், உணவுப்பொருள்களின் விலையேற்றம் தவிர்க்க முடியாததாக அமையும் என்றும் அமைச்சர் வசந்த சமரசிங்க குறிப்பிட்டிருக்கின்றார்.

போர் நடந்தால் பொருள்களின் விநியோகச் சங்கிலி பாதிக்கப்படும். அவ்வாறு விநியோகச் சங்கிலி பாதிக்கப்பட்டால், பொருள்களின் விலைகள் அதிகரிக்கும். இதெல்லாம் அடிப்படைப் புரிதலுக்கு உட்பட்ட விடயம். இதைக் கண்டு பிடித்துக் கூறுவதற்கு அமைச்சர்தான் வர வேண்டும் என்று எந்த அவசியமும் இல்லை. மாறாக, சாதாரண செய்தித்தாள்களே போதுமானவை. ஆக, ஓர் அரசாங்கமாகவும், ஓர் அமைச்சராகவும் கூனிக்குறுகி வெட்கப்பட்டு வெளிப்படுத்தவேண்டிய கருத்தை, வழக்கமான எதிர்க்கட்சி மனோநிலையில் இருந்து சர்வசாதாரணமாகக் கூறிவிட்டுக் கடந்திருக்கின்றார் அமைச்சர் வசந்த சமரசிங்க கடந்த காலங்களில் அரசாங்கங்களைத் தொடர்ச்சியாக விமர்சித்துப் பழக்கப்பட்டதால், தாம்தான் ஆட்சியில் இருக்கின்றோம் என்ற புரிதல் இல்லாமல் தேசிய மக்கள் சக்தியினர் பலர் இன்றும் செயற்பட்டு வருகின்றனர். அமைச்சர் வசந்த சமரசிங்க வெளிப்படுத்திய கருத்துகளையும் அவ்வாறே பார்க்க வேண்டியுள்ளது. உணவுப் பொருள்களுக்கான நுகர்வுக்கு வெளிநாடுகளையே சார்ந்திருக்க வேண்டிய கட்டாயநிலை உள்ளதென்றால், ஆட்சியைக் கைப்பற்றி ஒன்றரை வருடங்களாக தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் என்னதான் சாதித்தது? என்ற கேள்வி எழுவது இயல்பானதாக அமைகின்றது.

கடந்த கால அரசாங்கங்களின் செயற்பாடுகள் சரியானவையாக அமையவில்லை. ஊழல்கள், மோசடிகள் உட்பட ஏராளமான குளறுபடிகள் இருந்ததால் தான் மக்கள் திசைகாட்டி அரசாங்கம் தமக்கொரு சரியான திசையைக்காட்டும் எனத் தெரிவுசெய்தனர். ஆனால் அரசாங்கமோ, மீட்சிக்கான திசைகளைக் காட்டுவதற்குப் பதிலாக பின்னடைவு ஏற்பட்ட பாதைகளையும் கடந்தகாலக் குறைகளையும்தான் வெளிப்படுத்தி வருகின்றது. கடந்த கால அரசாங்கங்களில் தவறுகள், குறைகள் இல்லையென்றால், ஏன் மக்கள் உங்களைத் தெரிவுசெய்யப் போகின்றனர்? எனவே, 'அது இல்லை', 'இது இல்லை', 'அவ்வாறு செய்யமுடியாது', 'இது சிரமமானது' என்ற எதிர்மறை எண்ணங்களை விடுத்து மீட்சிக்கான பாதைகளை வகுப்பதற்கு அரசாங்கம் முன்வர வேண்டும்.



ஐந்தாண்டுகளில்

## வேலைவாய்ப்பு மோசடி; 10,654 முறைப்பாடுகள்

**கொழும்பு, மார்ச் 21**
**2020-2025ஆம் ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலப்பகுதியில் வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிலையங்களுக்கு எதிராக 10,654 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என்று இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது.**

அதிகப்படியான கட்டணம் வசூலித்தல், பொய்யான வேலை வாக்குறுதிகள் மற்றும் பணம் செலுத்திய பின் வேலை வழங்காமல் ஏமாற்றுதல் போன்ற முறைகேடுகள் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றன. இலங்கையின் பொருளாதார நெருக்கடியைத் தொடர்ந்து, நிலையான வருமானத்துக்காக அதிகமானோர் வெளிநாடு செல்ல முயன்றதால், இந்தச் சுரண்டல் நடவடிக்கைகள் மேலும் அதிகரித்துள்ளன. வெளிநாட்டு வேலைவாய்ப்பு மோசடி செய்பவர்களுக்கு எதிரான சட்டநடவடிக்கைகளை வலுப்படுத்த சிறப்பு பொலிஸ் பிரிவு நிறுவப்பட்டுள்ளது. இதன் மூலம் கடந்த ஐந்து மாதங்களில் 244 வழக்குகள் நீதிமன்றங்களில் தாக்கல் செய்யப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)




## வாகன விபத்தில் இளைஞர் சாவு!

கொழும்பு,மார்ச் 21
அதிவேக நெடுஞ்சாலையில் இடம்பெற்ற வாகன விபத்தில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார். லொறி ஒன்று இயந்திரக் கோளாறு காரணமாக வீதியோரத்தில் நிறுத்தப்பட்டிருந்த கொள்கலன் பாரவூர்தியின் பின்புறத்தில் மோதியதில் இந்த விபத்து நேர்ந்துள்ளது. இதன்போது, விபத்தில் காயமடைந்த லொறியின் சாரதி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சையின்போது உயிரிழந்துள்ளார்.
உயிரிழந்தவர் பண்டாரகம பகுதியைச் சேர்ந்த 29 வயதுடைய இளைஞர் என அடையாளம் காணப்பட்டுள்ளார். (ச-இ)

## சந்திரசேனவுக்கு மறியல் நீடிப்பு!

கொழும்பு, மார்ச் 21
ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்தின் முன்னாள் பிரதான நிறைவேற்று அதிகாரி கபில சந்திரசேனவை, எதிர்வரும் ஏப்ரல் மாதம் 2ஆம் திகதி வரை தொடர்ந்து விளக்கமறியலில் வைக்குமாறு நேற்று நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்துக்காக எயார்பஸ் விமானங்களைக் கொள்வனவு செய்த கொடுக்கல் வாங்கல்களில் இடம்பெற்றதாகக் கூறப்படும் நிதி முறைகேடுகள் மற்றும் ஊழல் குற்றச்சாட்டுகள் தொடர்பாக இவர் கைதுசெய்யப்பட்டிருந்தார். (ச-இ)

## சாதகமாக சாட்சியமளிக்க பேரம் பேசியவர்கள் கைது

கொழும்பு.மார்ச் 21
வெலிசர நீதவான் நீதிமன்றில் நடைபெற்று வரும் வழக்கு ஒன்றில் பிரதிவாதிக்குச் சாதகமாகச் சாட்சியமளிக்க 50,000 ரூபா இலஞ்சம் கோரிப் பெற்றுக்கொண்ட இரண்டு நபர்களை இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவின் அதிகாரிகள் கைதுசெய்துள்ளனர். ராகமவைச் சேர்ந்த நபர் ஒருவர் வழங்கிய முறைப்பாட்டின் அடிப்படையில் இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. (ச-இ)



## இலஞ்சம் பெற்ற பொலிஸ் கைது

கொழும்பு, மார்ச் 21
ராகம பொலிஸ் நிலையத்தின் போக்குவரத்துப் பிரிவு பொறுப்பதிகாரியாகக் கடமையாற்றிய உபபொலிஸ் பரிசோதகர் ஒருவர் இலஞ்சம் மற்றும் ஊழல் பற்றிய புலனாய்வு ஆணைக்குழுவின் அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார். வர்த்தகர் ஒருவரிடம் இலஞ்சம் கோரிய குற்றச்சாட்டில் அவர் கைதுசெய்யப்பட்டார். சந்தை நாள்களில் வீதிகளில் வாகனங்கள் நிறுத்தப்படுவதைத் தடுத்து, பாதசாரிகள் மற்றும் வர்த்தகர்கள் தடையின்றி நடமாடுவதற்கு வழிவகை செய்வதற்காக 10,000 ரூபா பணத்தை அந்த அதிகாரி கோரி பெற்றுக்கொண்டபோது கையும் மெய்யுமாகக் கைதுசெய்யப்பட்டார். (ச-இ)




செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# சனிப்பெயர்ச்சிப் பலன்

உங்கள் ராசிக்கு, வாக்கிய பஞ்சாங்கப்படி 6.3.2026 முதல் 24.4.2028 வரை, அஷ்டமத்துச் சனியாக அமர்ந்து பலன் தரப்போகிறார் சனி பகவான். எதிலும் முன்னெச்சரிக்கையுடன் செயற்படுவது நல்லது. அவ்வப்போது எதிர்மறைச் சிந்தனைகள் தலைதூக்கும்.

குடும்ப விஷயங்களை எவரிடமும் பகிரவேண்டாம். முக்கியமான பத்திரங்களில் கையெழுத்திடும் முன்பு தக்க ஆலோசனை தேவை. குல தெய்வப் பிரார்த்தனைகள் உங்களைப் பலப்படுத்தும்.

குடும்பத்தில் கணவன்-மனைவிக்குள் மனஸ்தாபம்வந்துபோகும். மகளின்திருமணத்துக்காக வெளியில் கொஞ்சம் கடன் வாங்கவேண்டி வரும். அத்தியாவசியச் செலவுகளால் கையிருப்புக் கரையும். பூர்விகச் சொத்துப் பங்கைப் பெறுவதில் சிரமங்கள் உண்டு. எனினும் சனிப்பெயர்ச்சிக் காலத்தில் முதல் நான்கு மாதங்கள், சில காரியங்கள் நல்லபடி நடந்தேறும். சொந்த ஊரில் செல்வாக்கு உயரும். சொத்துப் பிரச்னைகளுக்குத் தீர்வு காண இயலும். சனிபகவான் உத்திரட்டாதி நட்சத்திரத்தில் பயணிக்கும் 2.4.2026 முதல் 14.4.2027 வரையிலான காலத்தில், கடன்பிரச்சினைகளில் கவனம் தேவை. வீண் செலவுகளை அறவே தவிருங்கள். வீட்டில், வீண் வாக்குவாதம், தேவையில்லாத சந்தேகங்கள் வேண்டாம்.

சனிபகவான் 14.4.2027 முதல் 24.4.2028 வரை ரேவதியில் சஞ்சரிக்கும்போது குடும்பத்தில் சந்தோஷம் நிறைந்திருக்கும். எதிர்பார்த்த பணவரவு உண்டு. பேச்சால் சாதிப்பீர்கள். செல்வாக்கு உயரும். சனிபகவான் வக்ரகதியில் செல்லும் 15.7.2026 முதல் 30.11.2026 வரையிலான காலத்தில் புதிய முயற்சிகளை மேற்கொள்ளலாம். பணவரவும் திருப்தியாக இருக்கும். இந்தப் பெயர்ச்சிக்காலத்தில் சனி பகவான் மீனத்தில் அமர்ந்து, உங்கள் ராசிக்கு 2, 5ஆம் வீடுகளைப் பார்ப்பதால், எதிர்பார்த்த திடீர் பணவரவு உண்டு. பேச்சால் சாதிப்பீர்கள் என்றாலும், உணர்ச்சிவயப்படாமல் நடந்து கொள்வது நல்லது. குடும்பத்தாரின் பேச்சுக்கு முக்கியத்துவம் கொடுப்பது அவசியம்.



## சிம்மம்

இந்த ராசியைச் சேர்ந்த பெண்களுக்கு, குடும்பத்தில் குழப்பங்கள் விலகும். பணிக்குச் செல்லும் பெண்கள், விமர்சனங்களைத் தவிர்க்க வேண்டும். வீண்வாக்குவாதங்கள் வேண்டாம். சில காரியங்களில் உங்களின் நடவடிக்கைகள் பாராட்டப்பெறும். வியாபாரிகள் இந்தக் காலக் கட்டத்தில் பெரிய முதலீடுகளைத் தவிர்த்து விடுங்கள். வாடிக்கையாளர்களிடம் கடுமை காட்ட வேண்டாம். புதுத் துறைகளில் இறங்குகிறீர்கள் எனில், தக்க ஆலோசனையும் வழிகாட்டலும் தேவை. தொழிலில் பங்குதாரர்களால் மறைமுகப் பிரச்சினைகளும், எதிர்ப்புகளும் வந்து நீங்கும். இரும்பு, கடல் உணவு வகைகள், இரசாயன வகைகள், கட்டட உதிரிப் பாகங்கள் மூலம் இலாபம் வர வாய்ப்பு உண்டு. எவருக்கும் பெரிய தொகையைக் கடனாகக் கொடுக்கவேண்டாம். உத்தியோகத்தில், அலுவலகத்தில் வேலை அதிகரிக்கும். பணி சார்ந்து அதிகாரிகள், சக ஊழியர்கள் குறித்து எவ்வித விமர்சனமும் கூடாது. முக்கியமான ஆவணங்களைக் கவனமாகக் கையாளுங்கள். சிலருக்கு, வெளிநாட்டில் வேலை கிடைக்கும். வேறு நிறுவனத்திலிருந்தும் புது வாய்ப்புகள் வந்துசேரும்.




## பொய் விமர்சனம் தவிர்ப்போம்

நல்ல நோக்கோடு செய்யப்படும் விமர்சனமானது விமர்சிப்பவரை மட்டுமல்லாது விமர்சிக்கப்படுபவரையும் வளர்ச்சிப் பாதையில் கொண்டு செல்லும். ஆனால் இன்று முன்வைக்கப்படும் பெரும்பாலான விமர்சனங்கள் அதலபாதாளத்தில் தள்ளுவதாகவே அமைகின்றன. இயேசு தூய ஆவியாரால் பேயை ஓட்டிக்கொண்டிருந்த போது சகிக்க முடியாத பரிசேயர்கள், அவர் பேய்களின் தலைவனாகிய பெயல் செபூலைக்கொண்டு சாத்தானை ஓட்டுவதாக விமர்சித்தனர். உண்மையை மறைத்து பொறாமையை வெளிப்படுத்தினார்கள். புரிந்தும் புரியாதது போல் நடித்தார்கள். புரிந்த பின்னரே பணி தொடரலாம் என்றால் அது ஒருபோதும் சாத்தியப்படாது. நாம் ஒருவரை வெறுக்கின்றோமென்றால் அவரைப் புரியவில்லை என்றே அர்த்தம். புரிந்தால் அன்பு செய்வோம். புரிதல் மதிப்பையும், ஏற்புடமையையும், இணைந்த வாழ்வையும் உருவாக்கும். உறவுப்பூக்கள் புரிதல் செடியிலே தான் மலர்கின்றன. இயேசு தடைநிலையினரைப் புரிந்து கொண்டு கரிசனையோடு அணுகிய அருஞ்செயல் தவறாகப் புரிந்துகொள்ளப்பட்டது. ஆயினும் புறமுதுகு காட்டாது புரியா மனிதரைப் புரிந்துகொண்டு தந்தையின் திருவுளத்தை நிறைவேற்றினார். பிறரைப் புரிவதே பணியின் ஆரம்பம். தவறான விமர்சனக் கல்வீச்சுகளை விடுத்து புரிந்துணர்வுடன் பணிகளை முன்னெடுப்போம்.

● எஸ்.யேசுதாஸ்
கொழும்புத்துறை

## விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம், மார்ச் 21

வடக்கு மாகாணப் பொதுச்சேவையின் நன்னடத்தைப் பாதுகாவல் மற்றும் சிறுவர் கவனிப்புச் சேவைகள் திணைக்களத்தில் நிலவும் பல்வேறு பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்காக திறந்த போட்டிப் பரீட்சை தொடர்பில் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

மேற்றன் (ஆண் / பெண்) தரம் III, இல்லத் தாய் தரம் III, உதவி மேற்றன் (ஆண் / பெண்) தரம் III, உதவி விடுதிக் காப்பாளர் (ஆண்) தரம் III, உதவி இல்ல ஆசிரியர் தரம் III, உதவி இல்ல ஆசிரியை தரம் III, தொழிற்பயிற்சிப் போதனாசிரியர் (ஆண் / பெண்) தரம் III ஆகியவற்றுக்கே வடக்கு மாகாணப் பொதுச் சேவை ஆணைக்குழுவால் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இதுதொடர்பான முழுமையான விளம்பர அறிவித்தல் மற்றும் விண்ணப்பப் படிவங்களை வடக்கு மாகாண சபையின் உத்தியோகபூர்வ இணையத்தளமான www.np.gov.lk இலுள்ள 'Exam and Recruitment Advertisement' என்ற பகுதியினூடாகப் பார்வையிடமுடியும். தகைமையுடையவர்கள் இணையத்தள விளம்பரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நடைமுறைகளைப் பின்பற்றித் விண்ணப்பங்களை எதிர்வரும் ஏப்ரல் மாதம் 10ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்கமுடியும் என ஆணைக்குழுவின் செயலர் தெரிவித்துள்ளார். (ஏ-41-66,113)

### கிளிநொச்சியில்

## பாலைமரக்குற்றிகள் கடத்தல் முறியடிப்பு!

கிளிநொச்சி, மார்ச் 21

முல்லைத்தீவு, புதுக்குடியிருப்புப் பகுதியிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு அனுமதிப்பத்திரம் இன்றிச் சட்டவிரோதமாகக் கடத்தப்பட்ட சுமார் 40 இலட்சம் ரூபா பெறுமதியான பாலைமரக் குற்றிகளைத் தருமபுரம் பொலிஸார் நேற்றுக் கைப்பற்றியுள்ளனர்.

தருமபுரம் பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து ஏ-35 பிரதான வீதியில் பொலிஸார் திடீர் வீதிச் சோதனைகளை மேற்கொண்டனர். வீதியூடாகப் பயணித்த கனரக வாகனமொன்றைப் புளியம் பொக்கணைப் பகுதியில் வைத்துப் பொலிஸார் மறித்துச் சோதனையிட்டபோது அனுமதிப்பத்திரங்களின்றி மறைத்துவைக்கப்பட்டிருந்த பெறுமதிமிக்க பாலைமரக் குற்றிகள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன. சம்பவத்துடன் தொடர்புடைய கனரக வாகனத்தின் சாரதியையும் பொலிஸார் கைதுசெய்தனர்.

கைப்பற்றப்பட்ட மரக்குற்றிகளையும் சந்தேகநபரையும் கிளிநொச்சி நீதிமன்றத்தில் முற்படுத்த தருமபுரம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எம். திசாநாயக்க நடவடிக்கை எடுத்துள்ளார். (ச-113)

## பாராட்டு விழா

யாழ்ப்பாணம், மார்ச் 21

உலக சத்திரசிகிச்சை நிபுணர்கள் சங்கத்தின் தலைவராகத் தெரிவுசெய்யப்பட்டுள்ள, சிறுநீரக மாற்றுச் சத்திரசிகிச்சை நிபுணரும், அமெரிக்கப் பேராசிரியருமான தவம் தம்பிப்பிள்ளைக்கான பாராட்டு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு, கைதடி மேற்கு இணுங்கித்தோட்டக் கந்தசுவாமி கோவிலுக்கு அருகிலுள்ள அன்னை இரத்தினம் மணிமண்டபத்தில் நடைபெறும். கைதடிப் பொது அமைப்புகளின் ஏற்பாட்டில், ஓய்வுநிலை அதிபர் சி.பவளகுமாரன் தலைமையில் நிகழ்வு நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (க-66)



நயினாதீவு இறங்குதுறைப் பகுதியில் பயணிகள் மற்றும் பக்தர்களின் நலன்கருதி அமைக்கப்பட்டிருந்த தற்காலிகத் தகரக் கொட்டகைகள் நேற்றுக் காலை வீசிய திடீர் மினி சூறாவளியால் தூக்கி வீசப்பட்டுள்ளன. (ச-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னார் மாவட்டத்தில் சகலருக்கும் தடையின்றி எரிபொருள் விநியோகம்

## பிரதி அமைச்சர் தெரிவிப்பு



**மன்னார், மார்ச் 21**

**மன்னார் மாவட்டத்தில் சகலருக்கும் தடையின்றி எரிபொருளை வழங்க விசேட பொறிமுறை உருவாக்கப்பட்டுள்ளது. முக்கியமாக விவசாயம் மற்றும் மீனவர்களுக்குத் தடையின்றி எரிபொருளை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்க தெரிவித்துள்ளார்.**

மன்னார் மாவட்டத்தில் நிலவும் எரிபொருள் நெருக்கடி மற்றும் அத்தியாவசிய சேவைகளுக்கான எரிபொருள் விநியோகம் தொடர்பான விசேட கலந்துரையாடல் கடந்த செவ்வாய்க்கிழமை மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்றது.

அதில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

மன்னாரில் மீன்பிடிப் பருவகாலம் ஆரம்பித்துள்ளதால், மீனவர்களுக்குத் தேவையான எரிபொருள்களைத் தடையின்றி வழங்குவது குறித்து விரிவாக ஆராயப்பட்டுள்ளன. இதற்காக விசேட பொறிமுறை மீன்பிடி அதிகாரிகளால் உருவாக்கப்பட்டுள்ளது. அத்துடன் பெரும்போக அறுவடைப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதால், விவசாயிகளுக்குத் தேவையான எரிபொருள் விவசாயப் பணிப்பாளர் மற்றும் அதிகாரிகளின் மேற்பார்வையில் வழங்கப்படும். பொலிஸ் நிலையங்கள், மருத்துவமனைகள் மற்றும் ஏனைய அரச நிறுவனங்களுக்குத் தட்டுப்பாடின்றி எரிபொருளை வழங்க முன்னுரிமை அளிக்கப்படும். மாவட்டத்தில் மக்களின் இயல்புவாழ்க்கையைப் பாதிப்படையாமல் கொண்டு செல்ல அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன-என்றார். (சு-56)

# பயணிகளை வீதியில் தவிக்கவிட்ட தனியார் பேருந்துக்கு 3 நாள்கள் தடை

## பேருந்தின் நடத்துநருக்கும் ஐந்து நாள்கள் சேவைத் தடை

யாழ்ப்பாணம், மார்ச் 21

பயணிகளை இடைநடுவில் இறக்கிவிட்டு, தனியார் நிறுவனப் பணியாளர்களை ஏற்றிச் சென்ற தனியார் பேருந்துக்கு மூன்று நாள்கள் சேவைத்தடை விதிக்கப்பட்டுள்ளதுடன், குறித்த பேருந்தின் நடத்துநருக்கு 5 நாள்கள் சேவைத்தடையும் விதிக்கப்பட்டுள்ளது என்று வடக்கு மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகாரசபையின் தலைவர் பொறியியலாளர் சூ.விமலேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

பயணி ஒருவரால் முன்வைக்கப்பட்ட முறைப்பாட்டின் அடிப்படையில் இந்த அதிரடி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. கடந்த 14ஆம் திகதியன்று தனியார் பேருந்தில் பயணித்த பயணிகளைப் பேருந்து பழுதடைந்து விட்டதாகக் கூறி நடத்துநர் இடைநடுவில் இறக்கியுள்ளார். எனினும், சிறிது நேரத்தின் பின்னர் அதே பேருந்து வேறொரு தனியார் நிறுவனத்தின் (ஆடைத் தொழிற்சாலை) பணியாளர்களை ஏற்றிச் சென்றமை அவதானிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பில் பாதிக்கப்பட்ட பயணியால் வீதிப்பயணிகள் போக்குவரத்து அதிகாரசபைக்கு ஆதாரங்களுடன் முறைப்பாடளிக்கப்பட்டிருந்தது. இந்த முறைப்பாடு தொடர்பில், வடக்கு மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகாரசபையால் விசாரணை நடத்தப்பட்டது. விசாரணையின் போது பேருந்து திருத்த வேலைக்குச் சென்றதும், அதன் பின்னர் ஆடைத் தொழிற்சாலைப் பயணிகளை ஏற்றிச் சென்றதும் உறுதிப்படுத்தப்பட்டது.

பயணிகளை அசௌகரியத்துக்குள்ளாக்கி, அவர்களைப் பொறுப்பற்ற விதத்தில் இடைநடுவில் இறக்கிவிட்ட தவறான செயற்பாட்டுக்காகக் குறித்த தனியார் பேருந்து மூன்று நாள்களுக்குச் சேவையிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளது. அத்துடன், இடைநடுவில் இறக்கிவிடப்பட்டமை தொடர்பில் கேள்வி எழுப்பிய பயணிகளுக்கு உரிய பதிலளிக்காது முரண்பட்டமை உள்ளிட்ட காரணங்களுக்காக, நடத்துநர் 5 நாள்களுக்குச் சேவையிலிருந்து நிறுத்தப்பட்டுள்ளார்.

பொதுப்போக்குவரத்தின் போது இவ்வாறான அசௌகரியங்கள், விதிமீறல்கள் அல்லது முறைகேடுகள் இடம்பெற்றால், பொதுமக்கள் தயங்காது ஆதாரங்களுடன் (ஒளிப்படம் அல்லது காணொளி) 0719090900 என்ற வட்ஸ்அப் முறைப்பாட்டு இலக்கத்துக்கு அனுப்பிவைக்கமுடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (சு-66)





# யாழ்ப்பாணத்தில் இப்தார் நிகழ்வு

யாழ்ப்பாணம், மார்ச் 21

யாழ்ப்பாணம் பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில், வருடாந்த இப்தார் நிகழ்வு கடந்த புதன்கிழமை இடம்பெற்றது.

யாழ்.பிரதேச செயலர் பிரிவில் அதிகளவான முஸ்லிம்கள் வாழ்ந்து வருகின்ற நிலையில், சகல மதங்களின் நிகழ்வுகளையும் சமமாக மதித்து அரச நிறுவனம் என்ற வகையில் யாழ்ப்பாணம் பிரதேச செயலகத்தால் தொடர்ச்சியாக இப்தார் நிகழ்வு நடத்தப்பட்டு வருகின்றது.

உதவிப் பிரதேச செயலர் திருமதி கஜமுகன் துசியா தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் யாழ்.மாவட்ட மேலதிக செயலர் க.சிவகரன், மாவட்ட முஸ்லிம் கலாசார உத்தியோகத்தர் எஸ்.எம்.நிஸ்தாக், யாழ், கிளிநொச்சி ஜம்இய்யத்துல் உலமா சபைத் தலைவர், உலமாக்கள், சமய மதகுருமார்கள், யாழ்.மாநகரசபை முஸ்லிம் உறுப்பினர்கள், முஸ்லிம் பாடசாலையின் அதிபர்கள், பள்ளிவாசல் நிர்வாகிகள், முஸ்லிம் சமூகப் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்துகொண்டனர். (சு-21)

# ரம்ழானை முன்னிட்டு 25 பேருக்கு உலருணவு

யாழ்ப்பாணம், மார்ச் 21

தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் அற்றார் அழிபசி தீர்த்தல் திட்டத்தினூடாக, ரம்ழான் காலத்தை முன்னிட்டு, யாழ்ப்பாணம் பொம்மைவெளி மற்றும் சோனகத்தெருவைச் சேர்ந்த 25 குடும்பங்களுக்கு உலருணவுப் பொதிகள் வழங்கப்பட்டன.

பசுமை இயக்கத்தின் தலைவர் பொ.ஐங்கரநேசன் அத்தியாவசிய உலருணவுகள் அடங்கிய பொதிகளை உரிய பயனாளிகளிடம் கையளித்தார். இதற்கான நிதியனுசரணையைக் கனடாவைச் சேர்ந்த ஜீவகாந்தன் நடேசமூர்த்தி வழங்கியுள்ளார். (சு)



ஊர்காவற்றுறைப் பிரதேசசபையின் 2025ஆம் ஆண்டு வரவு - செலவுத் திட்டத்தின் நிதியொதுக்கீட்டில் பிரதேசத்தில் வசிக்கும் பொருளாதாரம் நலிவுற்ற பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் அண்மையில் வழங்கப்பட்டன. (சு-9)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








முல்லைத்தீவு மாவட்டத்தின் துணுக்காய் கல்வி வலயத்துக்குட்பட்ட மாங் குளம் மகா வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வலுநர் திறனாய்வுப் போட்டி நேற்று முன்தினம் பாடசாலை மைதானத்தில் சிறப்பாக நடைபெற்றது.
நிகழ்வில், பிரதம விருந்தினராக துணுக்காய் கல்வி லலய உடற் கல்வி பிரதிக்கல்விப் பணிப்பாளர் வு.புஸ்பரட்னம் கலந்து கெண்டார். (ச-19)



மட்டக்களப்பு தேசிய கல்வியியல் கல்லூரி சமூக விஞ்ஞானப் பிரிவு இரண்டாம் வருட மாணவ ஆசிரியர்களின், பக்கப் புரட்டிக் கண்காட்சி கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றது. (க-159)

பளை, அல்லிப் பளை சீ. சீ. த. பாடசாலை செயற் பட்டு மகிழ்வோம் நிகழ்வு பாடசாலை மைதானத்தில் அண்மையில் நடைபெற்றது. (ச-9)





கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயத்தின் இல்ல மெய்வன்மைப் போட்டி வித்தியாலய அதிபர் க.தவகீஸ்வரன் தலைமையில் வித்தியாலய மைதானத்தில் அண்மையில் இடம்பெற்றது. (ச-17)



# பொலித்தீன், லஞ்சீற் பாவனை; நானாட்டானில் விழிப்புணர்வு

மன்னார், மார்ச் 21
பொலித்தீன் மற்றும் லஞ்சீற் பாவனையால் ஏற்படும் பாதிப்புகள் மற்றும் அதற்கு மாற்றீடாகப் பயன்படுத்தக்கூடிய பொருள்கள் தொடர்பான விழிப்புணர்வுக் கலந்துரையாடல், நானாட்டான் பிரதேச சபைக் கலாசார மண்டபத்தில் கடந்த புதன்கிழமை நடைபெற்றது.
இதில் உணவு கையாளும் நிலையங்களில் உள்ள குறைபாடுகள் மற்றும் அவற்றை நிவர்த்தி செய்யும் முறைகள், பொலித்தீன் பாவனை தொடர்பான அரசின் சட்டதிட்டங்கள், 2010ஆம் ஆண்டுக்குப் பின்னர் கட்டப்பட்ட அனுமதி அற்ற கட்டடங்களுக்கு வியாபார அனுமதிப்பத்திரம் வழங்காமல் சட்ட நடவடிக்கை எடுத்தல், கட்டட அனுமதி பெற்றும் குடியேற்றச் சான்றிதழ் பெற்றுக் கொள்ளாமல் இருப்பதால் ஏற்படும் பாதிப்புகள், உணவு கையாளும் நிலையங்களை முறையாகப் பதிவு செய்தல் மற்றும் அவற்றின் தரம் குறித்த சான்றிதழ்களைக் காட்சிப்படுத்துவதன் அவசியம், சிறந்த முறையில் தரம் பேணிச் செயற்படும் வியாபார நிலையங்களுக்குப் பரிசில்கள் வழங்குதல் போன்ற விடயங்கள் விவாதிக்கப்பட்டன.
தவிசாளர் தலைமையில் நடைபெற்ற கலந்துரையாடலில், நானாட்டான் சுகாதார மருத்துவ அதிகாரி, மேற்பார்வை பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள், மாவட்டச் சுற்றுச்சூழல் அதிகாரி மற்றும் பிரதேசசபை உறுப்பினர்கள், உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (க-213)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர் கலாசாலையில் ரம்ழான் நிகழ்வுகள்

இஸ்லாமியர்களின் நோன்புக் காலத்தைச் சிறப்பிக்கும் வகையில் ரம்ழான் சிறப்பு நிகழ்வுகள் கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் ரதிலட்சுமி மண்டபத்தில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை நடைபெற்றன. கலாசாலை முதல்வர் செந்தமிழ்ச் சொல்லருவி. சந்திரமௌலீசன் லலீசன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் ஓய்வு நிலை அதிபரும், மாந்தை மேற்குப் பிரதேச சபை உறுப்பினருமான அப்துல் லத்தீப் பிலால் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றினார். 'இஸ்லாம் ஓர் இலகுவழி அறிமுகம்' எனும் தலைப்பில் கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் வர்த்தகநெறி ஆசிரிய மாணவர் எம்.எஸ் ஹீபத்துல்லா உரையாற்றினார். 'இஸ்லாமிய ஆசிரியர் கல்வி வளர்ச்சியில் கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் பங்கு' எனும் தலைப்பில் கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் முதல்வர் லலீசன் நறைவுரையாற்றினார். இதன்போது ரம்ழான் பற்றிய ஆவணக் காணொளி காட்சிப்படுத்தப்பட்டதுடன் அதிதிப் பேச்சாளர் கலாசாலையின் முகாமைத்துவக் குழுவால் கௌரவிக்கப்பட்டார். (எ-41-66)

## பெயர் மாற்றம்

சுழிபுரத்தை வசிப்பிடமாகக் கொண்ட
**தெய்வேந்திரம் தேவயானகி** ஆகிய நான் எனது பெயரை
**தெய்வேந்திரம் தேவநாயகி** எனப் பெயர் மாற்றம்
செய்வதோடு இனிவரும் சகல ஆவணங்களிலும்
**தெய்வேந்திரம் தேவநாயகி** என்றே கையொப்பம் இடுவேன் என
இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு மக்களுக்கு
அறியத்தருகின்றேன்.

(cs.61023) (N-1) **தெய்வேந்திரம் தேவநாயகி**

## யா/ கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை
## பழைய மாணவர்கள் ஒன்றுகூடல்

காலம் : 21.03.2026 (சனிக்கிழமை)
பிற்பகல் 4.30 மணி

இடம் : யா/ கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை மண்டபம்.

விடயம் : பாடசாலையின் 50 வது ஆண்டு நிறைவு தொடர்பானது.

நிர்வாகத்தினர்
பழைய மாணவர் சங்கம்







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





## வலைப்பந்தாட்டப் போட்டி அராலி சரஸ்வதி அசத்தல்

யாழ்ப்பாணம், மார்ச் 21

2026ஆம் ஆண்டுக்கான வலிகாமம் கல்வி வலயமட்ட வலைப்பந்தாட்டப் போட்டியில் அராலி சரஸ்வதி இந்துக்கல்லூரி மாணவிகள் சாதனையீட்டியுள்ளனர்.

அதன்படி கல்லூரியின் 16,18 வயதுப் பிரிவினர் முதலாம் இடத்தையும் 20 வயதுப்பிரிவினர் இரண்டாம் இடத்தையும் தனதாக்கி மாகாணமட்டப் போட்டிக்குத் தெரிவாகியுள்ளனர். (ச-555)

## மத்தியகிழக்குப்போர்எதிரொலி; சீனி, பருப்பு விலை அதிகரிப்பு!

கொழும்பு, மார்ச் 21

மத்திய கிழக்கில் நிலவும் போர்ப் பதற்றம் காரணமாகக் கப்பல் போக்குவரத்துக் கட்டணங்கள் அதிகரித்துள்ளதால் அத்தியாவசிய பொருள் களின் மொத்த விலையில் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளதாக ஏற்பட்டுள்ளதாக அத்தியாவசிய உணவுப்பொருள் இறக்குமதியாளர் சங்கத்தின் தலைவர் நிஹால் செனவிரத்ன தெரிவித்துள்ளார். அதன்படி

சீனி மற்றும் பருப்பு ஆகியவற்றின் மொத்த விலை ஒரு கிலோ கிராமுக்கு 2 முதல் 3 ரூபா வரை அதிகரித்துள்ளது. உருளைக்கிழங்கு மற்றும் பெரிய வெங்காயம் ஆகியவற்றின் மொத்த விலையில் கிலோவுக்கு சுமார் 10 ரூபா வரைகுறைவடைந்துள்ளது.

இலங்கைக்குத் தேவையான 60 சதவீத நெத்தலிக் கருவாடு ஈரானிலிருந்தே இறக்குமதி செய்யப் படுகிறது. போர் காரணமாக இந்த இறக்குமதி தற்போது பாதிக்கப்பட்டுள்ளது. இதற்கு மாற்றீடாகத் தாய்லாந்திலிருந்து இறக்குமதி செய்ய ஆலோசிக்கப்பட்டு வருகிறது.ரின் மீன் இறக்குமதி தற்போது முற்றாக நிறுத்தப்பட்டுள்ளது. எனினும், உள்நாட்டு உற்பத்தி போதியளவு இல்லாததால் மீண்டும் இறக்குமதி செய்யக் கோரிக்கைவிடுக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் பண்டிகைக் காலத்தில் தட்டுப்பாடு ஏற்படுவதைத் தவிர்க்க இந்தியா, சீனா மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகளிலிருந்து மேலதிகமாகப் பொருள்களை இறக்குமதி செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

தற்போதைய நிலையில் சந்தையில் பொருள் களுக்குப் பற்றாக் குறை இல்லை. எனவே, விலையேற்றத்தை எதிர்பார்த்து வியாபாரிகள் பொருள்களைப் பதுக்கிவைக்கக்கூடாது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## உக்ரைனுக்கு ஸ்பெயின் உதவி

கீவ், மார்ச் 21



உக்ரைனுக்குசுமார்100கோடியூரோ மதிப்பிலான புதிய இராணுவ உதவிகளை வழங்க ஐரோப்பிய நாடான ஸ்பெயின் முன்வந்துள்ளது.

ஸ்பெயின் பிரதமர் பெட்ரோ சான்செஸ் மற்றும் உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி இடையே கையெழுத்தான ஒப்பந்தப்படி, ஏவுகணைகள் மற்றும் நவீன ஆயுதங்கள் உக்ரைனுக்கு வழங்கப்பட வுள்ளன. போர் முடியும் வரை உக்ரைனுக்கு எங்கள் ஆதரவு தொடரும் என ஸ்பெயின் உறுதி அளித்துள்ளது. (எ-இ)

## மரண அறிவித்தல்

பிறப்பு 07 . 04 . 1944



இறப்பு 19 . 03 . 2026

### மனோகரன் செல்வதிறோஸ்

உடுவில் டச்சு வீதியைப் பிறப்பிடமாகவும், அளவெட்டி தெற்கு அளவெட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட மனோகரன் செல்வதிறோஸ் கடந்த 19.03.2026 அன்று கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பு நேசமலர் தம்பதியரின் அன்பு மகளும், ஞானசேகரம் இராசம்மா தம்பதியரின் பாசமிகு மருமகளும், காலஞ்சென்ற மனோகரனின் அன்பு மனைவியும், அல்பிரட் ஜெயசிங்கம் (வலிகாமம் தெற்மேற்கு பிரதேச சபை), ஜேம்ஸ் ஜெயகுலன் ஜெரேமியா ஜெயபாலன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், கிறிஸ்ரின் மாலினி (சென். ஜோன்ஸ் கல்லூரி), வமிலா, லெனோறா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமியும், ஜெனிபர், சுரன்ஜன், ஜொய்லின் ஆகியோரின் அருமை பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை நாளை (22.03.2026) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, அளவெட்டி தம்மனை இலங்கை பெந்தகோஸ்தே சபை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சிங்கவாசா,
அளவெட்டி தெற்கு,
அளவெட்டி.

தகவல்:
குடும்பத்தினர்
071 8562 098
077 7146 661

(CR 472868) A

## மரண அறிவித்தல்

தோற்றம் 07 . 08 . 1958



மறைவு 20 . 03 . 2026

### ஜெயராணி பரமநாதன்

மீசாலை தெற்கு மீசாலையைப் பிறப்பிடமாகவும், தாமோதரம்பிள்ளை வீதி, சங்கத்தானையை வதிவிடமாகவும் கொண்ட ஜெயராணி பரமநாதன் அவர்கள் நேற்று (20.03.2026) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - கனகம்மா தம்பதியரின் சிரேஸ்ட புதல்வியும், காலஞ்சென்றவர்களான சிற்றம்பலம் - சரஸ்வதிப்பிள்ளை ஆகியோரின் அன்பு மருமகளும், பரமநாதன் (ஓய்வுபெற்ற வங்கியாளர், இலங்கை வங்கி, சாவகச்சேரி) அவர்களின் அன்பு மனைவியும், கீதா (நோர்வே), நிசாந்தன் (பலநோக்கு கூட்டுறவுச் சங்கம், சாவகச்சேரி), நிரஞ்சன் (கிராம அலுவலர், பிரதேச செயலகம், தென்மராட்சி), விஜிதா (ஆசிரியர், யா/கச்சாய் ம.வி.) ஆகியோரின் பாசமிகு தாயாரும், ஜெயபாலன் (ஒப்பந்தகாரர்), ஜெயக்குமார் (ஓய்வுபெற்ற வீதி அபிவிருத்தி அதிகாரசபை உத்தியோகத்தர்), ஜெயதேவன் (ஜேர்மனி), ஜெயமணி (கனடா), ஜெயலக்சுமி (ஜேர்மனி), ஜெயக்காந்தன் (நோர்வே) ஆகியோரின் சகோதரியும், றஜீவன், றம்சியா (ப.நோ.கூ.சங்கம், சாவகச்சேரி), சரணியா (அபிவிருத்தி உத்தியோகத்தர் பிரதேச செயலகம், தென்மராட்சி), அகிலன் (ஆசிரியர், யா/மீசாலை வீரசிங்கம் ம.க.) ஆகியோரின் அன்பு மாமியாரும், இலக்கியன் (நோர்வே), டிருஷன், யாத்விகா, கேசியன், டிருசியன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (22.03.2026) ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக முற்பகல் 10.00 மணியளவில் கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.


இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டிக் கொள்கிறோம்.

தாமோதரம்பிள்ளை வீதி,
சாவகச்சேரி.

தகவல்:
குடும்பத்தினர்

(CS 314841A)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## வேதாரணியேஸ்வர...

களின் பெற்றோர் கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர்.
அண்ணளவாக 150 மாணவர்கள் கல்வி கற்கும் இந்தப் பாடசாலைக்கு அதிபராக இருந்தவர், கடந்த வருடம் ஒக்ரோபர் மாதம் 8ஆம் திகதி மாற்றலாகிச் சென்றார். இதையடுத்து, இன்றுவரை பதில் நியமனம் வழங்கப்படவில்லை. தற்போது சிரேஷ்ட ஆசிரியரொருவரே பதில் அதிபராகக் கடமையாற்றி வருகிறார்.
இதையடுத்தே, புதிய அதிபரை உடனடியாக நியமிக்குமாறு வலியுறுத்தி பெற்றோர் நேற்று கையொப்பச் சேகரிப்புப் போராட்டத்தை நடத்தியுள்ளனர். வடமாகாண ஆளுநருக்கு மனுவொன்றை அனுப்பிவைக்கும் நடவடிக்கையிலும் அவர்கள் ஈடுபட்டுள்ளனர்.
(அ-ம-422-66)

## சர்வதேச...

போர்க்குற்றங்கள் தொடர்பில் சர்வதேச விசாரணை நடத்துவது குறித்து நாடாளுமன்றத்தின் நேற்றைய அமர்வில், நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் கேள்வி எழுப்பினார்.
இதன்போது அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார மேலும் கூறியதாவது:-
இறுதிப்போர் தொடர்பான விடயங்கள் தொடர்பில் சர்வதேச விசாரணைகளோ அல்லது சர்வதேசப் பொறிமுறை ஊடான நகர்வுகளோ இடம்பெறாது. அத்தகைய விசாரணைகளுக்கு எமது அரசாங்கம் சிறிதும் இடம்கொடுக்காது. உள்நாட்டுப் போரின் இறுதிக்கட்டத்தில் 2 ஆயிரத்து 764 நபர்கள் காணாமற் போயுள்ளனர் என்று கூறப்படுகின்ற போதிலும், அது தொடர்பான தரவுகள் எவையும் இல்லை. எனினும் இந்த விடயங்கள் தொடர்பில் தற்போதைய அரசாங்கம் விசாரிக்கும். பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நீதி வழங்குவதற்கும், உண்மையைக் கண்டறிவதற்கும் அரசாங்கம் அப்பணிப்புடன் செயற்படும். ஆனால், உள்நாட்டுப் பொறிமுறை ஊடாகவே இந்த நடவடிக்கைகள் இடம்பெறும். சர்வதேச விசாரணைகள் என்ற பேச்சுக்கே இடமில்லை - என்றார்.
(அ-ம)

## வட்டுக்கோட்டை...

முன்பாக இன்று போராட்டம் நடைபெறவுள்ளது. தாதியர் இன்மை, 24 மணிநேரச் சேவையின்மை, அம்புலன்ஸ் வாகனத்தை இடமாற்றியமை உள்ளிட்ட விடயங்களுக்குத் தீர்வை முன்னிறுத்தியே இந்தப் போராட்டம் இடம்பெறவுள்ளது. மருத்துவமனைக்கு முன்பாக இன்று காலை 8 மணிமுதல் இந்தப் போராட்டம் நடைபெறும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.
(அ-ம-27-66)

## வடமராட்சி...

ஏற்படுத்தியுள்ளன. வடமராட்சி கிழக்கில் சுண்டிக்குளத்திலிருந்து வெற்றிலைக் கேணி வரை சில பகுதிகள் வன உயிரிகளின் பிரதேசமாக உள்ள போதிலும், அங்கு இதுவரை யானைத்தொல்லை இருந்ததில்லை. இவ்வாறான நிலையில், திடீரென ஐந்து யானைகள் மக்களின் வாழ்விடங்களுக்குள் நுழைந்ததால் அந்தப் பகுதி மக்கள் பெரும் அச்சத்தில் உள்ளனர். இந்த யானைகள் பிற பகுதிகளில் இருந்து கொண்டுவந்து விடப்பட்டிருக்கலாம் என்றும் மக்கள் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.
(அ-ம-26-66)

## எரிபொருள்...

கையாக, இன்று எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கான விநியோகம் இடைநிறுத்தம் செய்யப்படும் என்று சமூக வலைத்தளங்களில் தகவல்கள் பரப்பப்பட்டு வருகின்றன. இதையடுத்தே, அந்தத் தகவல்களை திட்டவட்டமாக மறுத்துள்ள பெற்றோலியக் கூட்டுத்தாபன வட்டாரங்கள், இன்று வழமைபோல் விநியோகம் இடம்பெறும் என்று கூறியுள்ளன.
(அ-ம-17)

## மருதடி...

நாளைமுதல் 25 தினங்கள் காலை, மாலை திருவிழாக்களாக இந்த மஹோற்சவப் பெருவிழா இடம்பெறவுள்ளது.
இந்த மஹோற்சவப் பெருந் திருவிழாவில் எதிர்வரும் 31ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இரவு 7 மணியளவில் திருமஞ்சத் திருவிழாவும், அடுத்த மாதம் 10ஆம் திகதி வெள்ளிக்கிழமை இரவு 7 மணியளவில் கைலாச வாகனத் திருவிழாவும், 13ஆம் திகதி திங்கட்கிழமை இரவு 7.30 மணியளவில் சப்பரத் திருவிழாவும், சித்திரைப் புத்தாண்டுத் திருநாளான 14ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணியளவில் தேர்த் திருவிழாவும், மறுநாள் 15ஆம் திகதி புதன்கிழமை காலை 9.30 மணியளவில் தீர்த்தத் திருவிழாவும், அன்றையதினம் மாலை 5 மணியளவில் கொடியிறக்க உற்சவமும் நடைபெறுமென ஆலய தர்மகர்த்தா சபையினர் தெரிவித்துள்ளனர்.
(அ-ம-66)

## அமெரிக்கப்...

கடிகள் மற்றும் அதனை எதிர்கொள்ளும் திட்டங்கள் தொடர்பில் ஜனாதிபதி அநுர நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றினார். இதன்போதே, அமெரிக்கப் போர் விமானங்கள் அனுமதி கோரிய விடயத்தையும், அதற்கு அனுமதி மறுக்கப்பட்டதையும் வெளிப்படுத்தினார்.
ஜனாதிபதி மேலும் தெரிவித்ததாவது:-
மத்திய கிழக்கில் ஏற்பட்டுள்ள போர்ச் சூழல் தொடர்பில் இலங்கை நடுநிலைமைக் கொள்கையைப் பின்பற்றி வருகின்றது. இந்தக் கொள்கையில் இருந்து நாம் விலகப்போவதில்லை. எனினும், நாம் ஒரு தரப்புக்கு சார்பாக செயற்படுகின்றோம் எனவும், முடிவுகள் முறையாக எடுக்கப்படுவதில்லை எனவும் சிலர் குற்றஞ்சாட்டுகின்றனர். இது அடிப்படையற்ற குற்றச்சாட்டாகும்.
கடந்த 9ஆம் திகதியும், 13ஆம் திகதியும் இலங்கைக்கு நல்லெண்ண அடிப்படையிலான பயணத்தை மேற்கொள்வதற்கு ஈரானியக் கப்பல்களை அனுமதிக்குமாறு, பெப்ரவரி மாதம் 26ஆம் திகதியன்று எம்மிடம் கோரிக்கை விடுக்கப்பட்டது. அன்றுமாலை மத்தள விமான நிலையத்தில் தமது போர் விமானங்களைத் தரையிறக்குவதற்கு அமெரிக்காவும் அனுமதி கோரியது. ஆனால், நாம் அந்தக் கோரிக்கைகளை நிராகரித்தோம்.
ஈரான் கப்பலுக்கு ஏன் அனுமதி வழங்கவில்லை? என சிலர் கேட்கின்றனர். அவ்வாறு வழங்கி இருந்தால் அமெரிக்கப் போர் விமானங்களுக்கும் அனுமதி வழங்கியிருக்க வேண்டும். அவ்வாறு செய்திருந்தால் இலங்கைக்கு தொலைவில்நடக்கும்போர்எமதுதுறைமுகங்கள் வரை நீண்டிருக்கும். நாம் அதற்கு இடமளிக்கவில்லை. நெருக்கடியான சூழ்நிலையிலும் நாம் மத்தியஸ்தக் கொள்கையை பாதுகாத்தோம்.
ஈரான் கப்பலில் இருந்த மாலுமியொருவருக்கு காயம் ஏற்பட்டுள்ளது. அவருக்கு சிகிச்சையளிப்பதற்கு உதவி கோரப்பட்டிருந்தது. அவ்வாறான சந்தர்ப்பங்களில் உதவ வேண்டும் என்பது சர்வதேச சட்டத்திலுள்ள ஏற்பாடு. அதற்கமைய இடமளிக்கப்பட்டது. இலங்கையின் பொருளாதார மண்டலத்துக்கு அப்பால் உள்ள பகுதியில் ஈரான் கப்பலொன்று தாக்குதலுக்கு இலக்கானது. அப்போதும் சர்வதேச சட்டம் மற்றும் மனிதாபிமான அடிப்படையில் நாம் உதவினோம்.
இலங்கைக்கும் அமெரிக்காவுக்கும் இடையிலான பாதுகாப்பு ஒப்பந்தம் தொடர்பில் பல கோணங்களில் கருத்துகள் முன்வைக்கப்படுகின்றன. போரில் ஈடுபடுவது தொடர்பில் எதுவும் இல்லை. இராணுவ பயிற்சி, ஒத்துழைப்பு உள்ளிட்ட விடயங்களே எமக்கிடையில் உள்ளன. எதிரணி கூறுவதுபோல ஒப்பந்தம் இருந்தால் அமெரிக்க விமானங்கள் தரையிறங்க அனுமதி வழங்கி இருக்க வேண்டும் அல்லவா? எனவே, சர்வதேச விவகாரங்களின்போது பொறுப்புடன் கருத்துகளை முன்வைக்க வேண்டும் என எதிரணியைக் கோருகின்றேன் - என்றார்.
(அ-ம-44)

## நயினாதீவில்...

டுள்ளன. நயினாதீவு ஸ்ரீநாகபூஷணி அம்மன் ஆலயத்துக்கு முன்பாகவுள்ள இறங்குதுறைப் பகுதியில் ஆலயத்தினரால் அமைக்கப்பட்டிருந்த தகரக் கொட்டகைகள், இந்தச் சூறாவளி காரணமாக தூக்கி வீசப்பட்டன. இதேவேளை, நேற்றுக் காலை 7.30 மணி முதல் காலை 9 மணி வரை யாழ். மாவட்டத்தின் பல பகுதிகளில் கணிசமானளவு மழைவீழ்ச்சி பதிவாகியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.
(அ-ம-66)

## வடக்கில்...

திணைக்களத்தின் ஊடக அறிக்கையில் உள்ளதாவது:-
இலங்கையில் அண்மைக்காலமாக நிலவும் கடும் வெப்பமான காலநிலை இன்றும் தொடர்வதற்குச் சாத்தியம் உள்ளது. இதன்படி, மேல், சப்ரகமுவ, வடமத்திய, தெற்கு மற்றும் வடமேல் ஆகிய ஐந்து மாகாணங்களுடன், மொனறாகலை, மன்னார், வவுனியா மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் வெப்பம் உக்கிரம் பெறும். எச்சரிக்கை மட்டம்வரை வெப்பம் அதிகரிக்கச் சாத்தியம் உள்ளதால், மக்கள் மிகுந்த அவதானத்துடன் இருக்க வேண்டியது அவசியம் - என்றுள்ளது.
(அ-ம)

## கலைப்பீட...

கலைப்பீடத்தின் முன்னாள் பீடாதிபதி பேராசிரியர் சி.ரகுராமின் பதவிக்காலம் கடந்த ஜனவரி மாதத்துடன் நிறைவடைந்திருந்தது. இதையடுத்து, நேற்றையதினம் கலைப்பீட பீடாதிபதி தெரிவு இடம்பெற்றது. பேராசிரியர் நா.பிரதீபராஜா 27 மேலதிக வாக்குகளைப் பெற்று பீடாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டார்.
சட்டதிருத்தங்கள் காரணமாக பல்கலைக்கழக பீடாதிபதிகள் தெரிவுகள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் சில வாரங்களாக இடைநிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. இதனாலேயே ஜனவரி மாதத்தில் நடைபெற வேண்டிய பீடாதிபதி தெரிவு தாமதமாக இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.
(அ-ம-66-26)

## களப்...

வேண்டியிருப்பதாக, வடமாகாண ஆளுநர் நா. வேதநாயகனிடம் முறையிடப்பட்டுள்ளது.
தற்போதைய நெருக்கடியான சூழலில் வடமாகாணத்தின் அபிவிருத்திப் பணிகளைத் தடையின்றி முன்னெடுத்துச் செல்வதில் காணப்படுகின்ற சவால்கள் மற்றும் அதற்கான மாற்று ஏற்பாடுகள் தொடர்பில் ஆராயும் விசேட உயர்மட்டக் கலந்துரையாடல் வடக்கு மாகாண ஆளுநரின் செயலகத்தில் நேற்று நடைபெற்றது.
இதன்போதே, பின்தங்கிய பகுதிகளில் அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் துறைசார் செயற்பாடுகளை மேற்கொள்ளும் களப் பணியாளர்கள் எதிர்கொள்ளும் நெருக்கடி நிலைமை தொடர்பில் சுட்டிக்காட்டப்பட்டது. அத்துடன், வீதி அபிவிருத்திப் பணிகளுக்கான ஒப்பந்தங்களைப் பெற்றுக்கொண்ட ஒப்பந்ததாரர்கள், கட்டுமான மூலப் பொருள்களின் தட்டுப்பாடு காரணமாக இன்னும் தமது பணிகளை ஆரம்பிக்கவில்லை எனவும் அதிகாரிகளால் தெரிவிக்கப்பட்டது. சந்தையில் ஏற்பட்டுள்ள திடீர் விலை அதிகரிப்பும் திட்டமிடப்பட்ட அபிவிருத்திப் பணிகளில் நேரடியான தாக்கத்தைச் செலுத்துவதாகவும் கலந்துரையாடலில் விவாதிக்கப்பட்டது. இந்தக் கருத்துகளைக் கேட்டறிந்த ஆளுநர், களப்பணிகளில் ஈடுபடும் உத்தியோகத்தர்களுக்கான எரிபொருள் விநியோகச் சிக்கலைத் தீர்ப்பதற்கு அந்தந்த மாவட்டச் செயலாளர்களுடன் ஒருங்கிணைந்து துரித நடவடிக்கைகளை மேற்கொள்வதாக உறுதியளித்தார்.
இந்தக் கலந்துரையாடலில் வடக்கு மாகாணப் பிரதம செயலாளர் திருமதி தனுஜா முருகேசன், வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளர் எஸ்.சத்தியசீலன், பிரதிப் பிரதம செயலாளர்கள், மாகாண அமைச்சுகளின் செயலாளர்கள், திணைக்களப் பணிப்பாளர்கள் மற்றும் அரச உயர் அதிகாரிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.
(அ-ம-26-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணமகள் தேவை
41 வயதுடைய கனடாவில் வசிக்கும் (PR) உடைய யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த கண்பார்வையற்ற மணமகனுக்கு மணமகள் தேவை.
Whatsapp / Viber
0044 757 862 6565
(CS/61027) J-1

# மாணவர்களை இலக்கு வைத்து போதைப்பொருள்கள் ஊடுருவல்

## சாவகச்சேரி பொலிஸ் நிலையப் பொறுப்பதி

யாழ்ப்பாணம்,மார்ச் 21

**தற்போது மாணவர்களை இலக்கு வைத்து போதைப்பொருள் ஊடுருவல் அதிகரித்துள்ளது. இது மாணவர்களது கல்வியைச் சிதைப்பதற்கான தீய சக்திகளின் சதி. எனவே இதற்கு மாணவர்கள் அடிபணியக்கூடாது. ஆசிரியர்கள் கூறும் அறிவுரைகளைப் பின்பற்றி நடக்க வேண்டும் என்று சாவகச்சேரி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ம.கோனேஸ்வரன் தெரிவித்தார்.**



சுன்னாகம் கந்தரோடை ஸ்கந்தாக் கல்லூரி மாணவர்களின் வருடாந்த இல்ல விளையாட்டுப்போட்டி நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், போதைபொருள் சிறிய உருண்டை வடிவில், இனிப்பு மாதிரி காணப்படும் அதனை உங்களுக்குத் தெரிந்தவரோ அன்றி நண்பர்களோ தந்தால் வாங்கிச் சாப்பிடக் கூடாது. போதைப்பொருளை வாங்கிச் சாப்பிட்டால் இரு தடவை அல்லது மூன்று தடவைகள் சாப்பிட்டவுடன் பின்னர் கண்டிப்பாகத் தொடர்ந்து சாப்பிடத் தூண்டக் கூடியது. தென்மராட்சிப் பாடசாலையொன்றில் போதைப் பொருளுக்கு அடிமையான 5 மாணவர்கள் சட்டமருத்துவ அதிகாரியால் உறுதிப்படுத்தப்பட்டுள்ளனர். அந்தமாணவர்கள் சாப்பிட்ட இனிப்பில் கஞ்சா கலக்கப்பட்டிருந்தமை உறுதிப்படுத்தப்பட்டது. இதனால் அவர்கள் அச்சுவேலியிலுள்ள, நன்னடத்தை நிலையத்தில் சேர்க்கப்பட்டுள்ளனர். பாடசாலைகளில் மாணவர்களுக்கு ஆசிரியர் கூறும் அறிவுரை, அவர்களது வாழ்க்கையை நல்வழிப்படுத்துவதற்காகவே. எனவே மாணவர்கள் ஆசிரியர்களுக்குப் பணிந்து கல்வியை முன்நிறுத்தி சமூகத்தில் முன்னேற வேண்டும். அன்று ஆசிரியர்களுக்குப் பணிந்து நடந்தமையால், இன்று நான் கற்றபாடசாலையில் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளும் வாய்ப்பு எனக்குக் கிட்டியது. அதனால் தான் நான் இன்று இந்தப் பதவிக்கு வரக்கூடியதாகவும் இருந்தது. எனவே மாணவர்களாகிய நீங்கள் மனதில் குறிக்கோளை வைத்துப் படியுங்கள். கல்வியுடன், விளையாட்டிலும் ஆர்வத்துடன் பங்குபற்றுங்கள். கல்வி கற்ற பின்னரும் விளையாட்டு எமக்கு அவசியமானதே. என்றார். (க-131)

# பொதுக்கூட்டம்

வடமராட்சி தெற்கு மேற்குப் பகிரங்க சேவை ஓய்வூதியர்களின் நம்பிக்கை நிதியத்தின் 16 ஆவது வருடாந்தப் பொதுக்கூட்டம் இன்று சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு, மூத்த விநாயகர் திருமண மண்டபத்தில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. கரவெட்டி பகிரங்க சேவை ஓய்வூதியர்களின் நிதியத்தின் தலைவர் வே.சிவசிதம்பரம் தலைமையில் நடைபெறும் கூட்டத்தில், முதன்மை விருந்தினராக கரவெட்டி பிரதேச செயலர் திருமதி மணிவண்ணன் உமாமகளும், சிறப்பு விருந்தினர்களாக கரவெட்டி உதவிப் பிரதேச செயலர் செல்வரட்ணம் சாருதர்ஷன், கரவெட்டி பிரதேச செயலகக் கணக்காளர் க.சுதர்சன், யாழ். மாவட்ட பகிரங்க சேவை ஓய்வூதியர்களின் நிதியத்தின் தலைவர் அ. அருந்தவநேசன் ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர். (க-422)

# பேருந்தில் தவறவிடப்பட்ட நகை, பணம் ஒப்படைப்பு

யாழ்ப்பாணத்திலிருந்து கொடிகாமம் நோக்கிச் சென்ற தனியார் பேருந்தில் நபர் ஒருவர் தவறவிட்ட தங்க நகைகள், பணம் மற்றும் ஆவணங்கள் அடங்கிய கைப்பையை அந்தப் பேருந்தின் ஊழியர்கள் உரியவரிடம் ஒப்படைத்துள்ளனர்.

கடந்த புதன்கிழமை யாழ்ப்பாணத்திலிருந்து கொடிகாமம் வந்த தனியார் பேருந்து, கொடிகாமம் பேருந்து நிலையத்தில் நிறுத்தப்பட்டபோது அதனுள் ஒரு கைப்பை உரிமையாளர் இன்றி இருந்ததைக் கடமையிலிருந்த ஊழியர்கள் கவனித்தனர். அதில் தங்க மோதிரம், இரண்டு தங்கத் தோடுகள், பணம் மற்றும் ஆவணங்கள் காணப்பட்டன. கண்டெடுக்கப்பட்ட கைப்பையை அவர்கள் கொடிகாமத்திலுள்ள தென்மராட்சி தனியார் பேருந்துச் சேவைகள் சங்கத்தில் ஒப்படைத்தனர். தனது கைப்பை காணாமற்போனமை குறித்துச் சங்க அலுவலகத்தில் தவறவிட்ட பெண் முறையிட்ட நிலையில் அந்தக் கைப்பை ஆதாரங்களின் அடிப்படையில் அவரிடம் ஒப்படைக்கப்பட்டது. நேர்மையாகச் செயற்பட்ட ஊழியர்களுக்கு பலரும் பாராட்டுகளைத் தெரிவித்தனர். (ச-9)

# புளியம்பொக்கணை ஆலயத்தின் பொங்கல் விழாவுக்கு ஏற்பாடுகள்

கிளிநொச்சி, மார்ச் 21

கரைச்சி புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலயத்தின் வருடாந்த பங்குனி உத்தரப் பொங்கல் விழாவுக்கான ஏற்பாட்டுக்கூட்டம், ஆலய முன்றலில் நேற்று இடம்பெற்றது. நாட்டின் பல பாகங்களிலிருந்தும் பல இலட்சத்துக்கும் மேற்பட்ட பக்தர்கள் இந்த ஆலயத்துக்கு வரும் நிலையில் தேவைப்பாடுகள், சுகாதார வசதி மற்றும் பாதுகாப்பு போன்ற விடயங்கள் இதன்போது ஆராயப்பட்டன. மாவட்டச்செயலர்சுப்பிரமணியம் முரளிதரன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில், கண்டாவளைப் பிரதேச செயலர் த. பிருந்தாகரன், கரைச்சிப் பிரதேசசபையின் தவிசாளர் அ.வேழமாலிகிதன், மாவட்ட அனர்த்த முகாமைத்துவப்பிரிவுப் பிரதிப்பணிப்பாளர், துறைசார்ந்த திணைக்களங்களின் தலைவர்கள், ஆலயத் தொண்டர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். ஆலயத்தின் பொங்கல் விழா எதிர்வரும் 25ஆம் திகதி புதன்கிழமை விளக்கு வைத்தலுடன் ஆரம்பமாகி, ஏப்ரல் மாதம் முதலாம் திகதி வரை நடைபெறவுள்ளது. (க-55)

# சுகாதார விதிமீறல்; நான்கு உணவகங்களுக்கு துன்னாலையில் தண்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 21

வடமராட்சி துன்னாலைப் பகுதியில் சுகாதார விதிகளை மீறிச் செயற்பட்ட நான்கு உணவு கையாளும் நிலையங்களின் உரிமையாளர்களுக்கு பருத்தித்துறை நீதவான் நீதிமன்றினால் 64 ஆயிரம் ரூபா தண்டப்பணம் அறவிடப்பட்டுள்ளது. துன்னாலை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ஜெ.சிந்துஜன் தலைமையில் கரவெட்டி சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனையின் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் குழுவினரால் உணவு கையாளும் நிலையங்களில் அண்மையில் திடீர்ப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. இதன்போது 4 உணவு கையாளும் நிலையங்கள் சுகாதார விதிமுறைகளைப் பின்பற்றாது செயற்பட்டமை கண்டறியப்பட்டது.

இதுதொடர்பில் குறித்த உணவு கையாளும் நிலையங்களுக்கு எதிராக பருத்தித்துறை நீதவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்ட நிலையில் நீதிமன்றத்தினால் உணவக உரிமையாளர்கள் எச்சரிக்கப்பட்டதுடன் 64,000 ரூபா தண்டப்பணமும் விதிக்கப்பட்டது. (ச-100,422)

# மன்னாரில் எரிபொருள்களைப் பதுக்கி கொள்ளை இலாபம் ஈட்டும் குழுவினர்

## மக்கள் பெரும் பாதிப்பு

மன்னார், மார்ச் 21

மன்னார் மாவட்டத்தில் எரிபொருள்களைச் ஒரு சிலர் குழுவாக இணைந்து பதுக்கிவைத்து, அதிக விலைக்கு விற்பனை செய்து இலாபம் ஈட்டி வருகின்றனர். இதனால் மீன்பிடி, விவசாயம் மற்றும் சிறு வியாபாரங்களில் ஈடுபடும் மக்கள் பெரும் பாதிப்பை எதிர்கொண்டுள்ளனர் என்று குற்றஞ்சாட்டப்படுகின்றது.

எரிபொருள்களை கியூ.ஆர். குறியீட்டுக்கு மட்டும் பெற்றுக்கொள்ள முடியும் என்று அரசாங்கம் அறிவித்துள்ள நிலையில், ஒரு சாரார் முறையற்ற விதத்தில் எரிபொருள்களைக் கொள்வனவு செய்து, அவற்றை அதிக விலைக்கு விற்று வருகின்றனர். இதனால் வியாபாரிகள், விவசாயிகள் மற்றும் மீனவர்கள் தமக்கு போதியளவு எரிபொருள்களைப் பெற்றுக் கொள்ள முடியாதுள்ளனர். எரிபொருள் நிலையங்களுக்கு வந்துசேரும் எரிபொருள்கள், உரிய முறையில் தகுதியானவர்களுக்குச் சென்றடைவதை அதிகாரிகள் உறுதி செய்யவேண்டும். அதிக விலைக்கு விற்பனை செய்பவர்கள் மற்றும் பதுக்குபவர்கள் மீது சட்டரீதியான கடுமையான நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.

மீனவர்கள் மற்றும் விவசாயிகளுக்கான பிரத்தியேக எரிபொருள் ஒதுக்கீட்டை முறையாக விநியோகிக்க வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (க-213)





இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 21.03.2026 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org